விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை (12.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

# யாழ். வந்தது ரயில்

## பரீட்சார்த்தப் பயணமாக


(யாழ்ப்பாணம்)

***ஜனாதிபதியின் யாழ். வருகையினை முன்னிட்டு பளையிலிருந்து யாழ். வரையிலான பரீட்சார்த்த புகைவண்டிப் பயணம் நேற்று இடம்பெற்றது.***

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்து பிரதி அமைச்சர்கள், வட மாகாண ஆளுநர், வட மாகாண புகையிரதப் பணியாளர் எனப் பலர் இப்பரீட்சார்த்தப் பயணத்தில் பயணம் செய்துள்ளனர்.

பளையிலிருந்து ஆரம்பமாகிய இவ் புகையிரதப் பயணத்தில் கல

24ஆம் பக்கம் பார்க்க....



## பொது பல சேனாவின் செயலால் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு நுழையும்

## இலங்கைக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கும் பௌத்த தீவிரவாத அமைப்பான பொது பல சேனாவை அரசாங்கம் கட்டுப்படுத்தாவிட்டால், இலங்கைக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். இஸ்லாமிய பயங்கரவாதம் நுழைவதற்கு அதிகபட்ச சாத்தியப்பாடு இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் எஸ்.ஆர்.ஏ. அமைப்பு (Security Risk Asia) இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

டில்லியில் இயங்கும் எஸ்.ஆர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இராணுவ பாதுகாப்பு அதிகரித்துக் காணப்பட்டது. இன்று இன்னும் அதிகரிக்கப்படக் கூடும் என தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தை முன்னிட்டே இப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வீதிகள் தோறும் இராணுவத்தினர் குவிக்கபட்டுள்ளதுடன் முக்கிய இடங்களில் அதிகளவான இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-8)

# ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தை கூட்டமைப்பு புறக்கணிக்கும்!

## மாவை எம்.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யாழ்.விஜயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிப்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுடைய ஜனநாயகத் தீர்ப்புக்களைபுறக்கணித்து விட்டு தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர்களை

24ஆம் பக்கம் பார்க்க....

## ‘நானே பொது வேட்பாளர்’ ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் பல எனக்கே ஆதரவானவை. எனவே இலங்கை அரசியலில் நானே பொதுவேட்பாளர். இவ்வாறு தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாக தான் போட்டியிடுவார் என்றும் அறிவித்துள்ளார்.

பொல்ஹாவெலவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகை

23ஆம் பக்கம் பார்க்க....

# கிளிநொச்சிக்கு இன்று வருகிறார் ஜனாதிபதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு இன்று வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். இந்த நிலையில் ஜனாதிபதியை வரவேற்க அரச ஊழியர்கள் அனைவரும் குறித்த நிகழ்வுகளில் பங்கேற்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுமக்களைக் கலந்து கொள்ளச் செய்யும் வகையில் விசேட போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. முல்

24ஆம் பக்கம் பார்க்க....

| | குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரத சேவை | யாழ்.தேவி புகையிரத சேவை | கடுகதி புகையிரதம் (இன்ரசிற்றி) | தபால் புகையிரதம் (மெயில் ரயில்) | விசேட புகையிரதம் சாதாரணமானது |
|---|---|---|---|---|---|
| கொழும்பு–யாழ் | காலை 5.50– மு.பகல் 11.57 | காலை 7.15– பி.ப 3.00 | மு.ப 11.50– பி.ப 6.15 | மாலை 7.45– காலை 5.07 | காலை 9.40– பி.ப 5.20 (சனி மட்டும்) |
| யாழ்–கொழும்பு | பி.ப 1.45– இரவு 8.00 | காலை 7.25– பி.ப 3.47 | மு.ப 11.00– பி.ப 5.40 | இரவு 7.05– அதிகாலை 4.23 | மு.ப 10.00– பி.ப 6.11 (ஞாயிறு மட்டும்) |

# இராணுவத்தை வெளியேற்றுவதாக ஜனாதிபதி உறுதியளிக்க வேண்டும்

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவது உடன் நிறுத்தப்படும் எனவும் இராணுவம் வடக்கினை விட்டு வெளியேறும் என உறுதியளிக்க வேண்டுமெனவும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அமிர்தலிங்கம் இராசகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வரும்போது நாம் எதிர்பார்ப்பது என்ன? போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் ஈழத் தமிழ் மக்கள் இன்னமும் எந்த ஒரு தீர்வும் கிடைக்காத நிலையிலேயே இருப்பதாகவே கருதுகின்றார்கள்.

அதுவே உண்மையும் ஆகும். வெளிப்பார்வைக்கு அபிவிருத்தி இடம்பெறுவதான ஒரு மாயத் தோற்றமே அன்றி ஈழத்தமிழ் மக்கள் மனதில் அப்படியான ஒரு உணர்வு ஏற்படவில்லை ஈழத்தமிழ் மக்

23ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
இலங்கையில் முதன் முறையாக மூன்று வருட உத்திரவாத்துடன் கூடிய
HP Pavilion15
HP,SAMSUNG, LENOVO, ASUS
கணினிகள் இப்பொழுது எம்மிடமிருந்து!
வட்டி இன்றிய கொடுப்பனவு
விசேட விலைக் கழிவுகள்
3வருட உத்திரவாதம்
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

காணி
**விற்பனைக்கு**

கிழக்கு அரியாலை 3ம் கட்டையில் வீதியை ஒரு எல்லையாகக் கொண்ட 18.2 ஏக்கர் S.R தோட்டம் என்று அழைக்கப்படும் காணி முழுமையாகவோ அல்லது மூன்று பகுதிகளாகவோ வீதியை எல்லையாக கொண்டு விற்பனைக்கு உண்டு.
விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

(C-8712)

**077 6080565, 021 222 1827**



**டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்**

சிவலிங்கப்புளியடியில் இயங்கிய டயானா பிளாஸ்ரிக் தொழிலகம் தற்சமயம் 108, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில் இயங்குகின்றது.

T.P:021 222 8680, 0775925088

(சி-8674)



# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

14.10.2014 முதல் 20.10.2014 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
**மீண்டும் யாழில்**
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**
(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-8717)


## வர்த்தமானி தேவை இல்லை

(கொழும்பு)


நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமையை நிலைநாட்டும் நோக்கில் ஜனாதிபதியினால் மாதாந்தம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்ய வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலானது, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இராணுவத்தினரை ஈடுபடுத்தும் நோக்கில் வெளியிடப்படுகின்றது.

அவசரகால சட்டம் நீக்கப்பட்டது முதல் மாதாந்த வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் படையினர், மக்கள் போராட்டங்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத்தின் மூத்த ஊடகவியலாளர்

**ஐயா.சச்சிதானந்தம்**

(ஐயாத்துரை சச்சிதானந்தம்) அவர்கள் 10.10.2014 அன்று இயற்கை எய்தினார் என்ற தகவலை வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.10.2014 இன்று காலை 9 மணிக்கு சுண்டுக்குளி, விதானையார் லேன் என்ற முகவரியிலுள்ளஅவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அன்னாரின் பிரிவால் துயருறும்
**டான் ரீவி ஊடக நண்பர்கள்**

(சி-8731)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(சி-8715)


# பயணிகள் பேருந்துடன் மோதி இராணுவ வாகனம் விபத்து

## 15 பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இருந்து உருத்திரபுரம் நோக்கி பயணிகளை ஏற்றி பயணித்த பேருந்தும் கிளிநொச்சியில் இருந்து நேர் எதிரே வந்து கொண்டிருந்த இராணுவ வாகனமும் மோதிய விபத்தில் இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

இச் சம்பவத்தில் பேருந்தில் பயணித்த 12 பயணிகள் காயமடைந்த நிலையில் இராணுவ வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட மூவர் காயம் அடைந்த நிலையிலும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு அருகில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது;

கிளிநொச்சியில் இருந்து ஏ9 வீதியூடாக கரடிபோக்கு சந்திவரை பயணித்த பேருந்து அங்கு நின்ற பயணிகளை ஏற்றி மீண்டும் கரைச்சி பிரதேசசபைக்கு அருகிலுள்ள வீதியைக் கடக்க முயன்ற வேளையில் கிளிநொச்சியிலிருந்து நேர் எதிரே வந்த இராணுவ வாகனம் பேருந்துடன் மோதியது.

இதன்போது பேருந்தில் பயணித்த 12 பேர் காயமடைந்தனர். அத்துடன் இராணுவ வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட மூவர் காயம் அடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு வரைந்த கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் பேருந்தினை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர். (எ-2-271)

# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்
**ஐயாத்துரை குணசேகரம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.07.1953 | 11.09.2014 |

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12/10/2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிக் கிரியை நிகழ்வுகளின் போது பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராசவீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (8029)

இங்ஙனம் குடும்பத்தினர்
0778583863

# இராணுவத்தைச் சேர்ந்த 108 பேருக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

இராணுவ தளபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரின் பரிந்துரைகளுக்கு அமைவாக 108 இராணுவ வீரர்கள் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த பதவியுயர்வு, முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

யுத்த வீரர்கள் எழுவர் உட்பட, மேஜர் தரத்திலுள்ள 108 இராணுவ வீரர்கள் லெப்டினன்ட் கேர்ணல்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இந்த பதவியுயர்வுகளானது, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் முயற்சியின் பலனாக, இராணுவ தினத்தினை முன்னிட்டு வீரர்களுக்கு அளிக்கப்பட்ட விசேட பரிசு என இராணுவ தளபதி கொமாண்டர் தயா ரத்னாயக்க தெரிவித்தார். (எ-8)



2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார்த்ததில் பிடித்தவை...


மயூரன் சுபிரோனி





ஜே.பி. சித்திரங்கள்




கோபிதாஸ்



கேதீஸ்




ஆர். உதிஸ்ரன்




ராகுலன் பாவா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

SDB உபஹார

ஓய்வு பெற்றவர்களுக்கான கடன் திட்டம்

வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை




| | | |
|---|---|---|
| ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.* | வயதெல்லை கருதப்படமாட்டாது.* | உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை. |
| ஆகக்குறைந்த வட்டி,ஆகக்குறைந்த தவணைக் கட்டணம்.* | மரணத்தின்போது தங்கி வாழ்பவருக்கு நட்டயீட்டுக் கொடுப்பனவு.* | வங்கியொன்றினால் வழங்கப்படும் அதிகூடிய ஓய்வுக் கடன்.* |

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஓய்வுபெற்றவர்களான உங்களது விருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0112 832577

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
ஓய்வூதியத் திணைக்களம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

SDBL
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ
தேசத்தின் முன்னோடி

Reg. No: PB 62PQ
Fitch rating BB+(lka)
art sense

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் உரிமை பேணுதல் தொடர்பான கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

முதியோர் உரிமை பேணும் அமைப்பு ஒன்றினை அமைக்கும் ஏற்பாடுகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்தியத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2014 ஆம் ஆண்டிற்கான சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் கடந்த 2 ஆம் திகதி யாழ். கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் உரிமைகளை பாதுகாத்தலும் மேம்படுத்தலும் எனும் கருப்பொருளில் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது.

இச்செயலமர்வில் மேற்படி பிராந்தியத்தில் முதியோர் உரிமைகளை பாதுகாக்கும் பலமான முதியோர் அமைப்பு ஒன்றின் தேவை தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அந்த வகையில் குறித்த அமைப்பு ஒன்றினை அமைப்பதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் நடத்தவுள்ளதாக மேற்படி பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார். (இ




## சிறுவர், முதியோர் தினவிழா

யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மேற்படி நிலையத்தில் சமாதான நீதவான் நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ

## தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை

யாழ்.மாவட்டதொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று நாளை திங்கட்கிழமை முற்பகல்8 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (இ

## அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்

யாழ்.சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொது நூலகத்தின் வாசகர் வட்டம், மற்றும் அபிவிருத்திக் குழு பொதுக்கூட்டம் எதிர் வரும் 15ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு குழுத்தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறும்

இக் கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் தேசிய வாசிப்பு மாத நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தற்காலிக நூலக பொறுப்பாளர் ஜெயகாந்தன் அறிவித்துள்ளார். (இ-29)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

ஆவரங்கால் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ஆவரங்கால் விவேகானந்த சனசமூக நிலைய மண்டபத்தில் சம்மேளனத்தின் உப தலைவர் வெ.அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போதுதலைவராகவெ.அமிர்தலிங்கமும் செயலாளராக கா.சிவசோதியும் பொருளாளராக க.பொன்னையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில்ஆவரங்கால்மேற்கு கிராம சேவையாளர் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், புத்தூர்சமூகநலசேவைஉத்தியோகத்தர்ஆகியோர் கலந்து கொண்டு கருத்து ரைகளை வழங்கியிருந்தனர். (இ-134)

# நள்ளிரவில் மூன்று கடைகள் தீயில் எரிந்து நாசமாகின

(மிருசுவில்)

யாழ். கொடிகாமம் சந்தைக்குள் அமைந்துள்ள 3 வர்த்தக நிலையங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை தீக்கிரையாகியுள்ளதாக கொடிகாமப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் புடைவை வியாபார நிலையம், அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் மற்றும் பனம் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம் என்பனவே இவ்வாறு தீயால் எரிந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இத் தீவிபத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாவிற்கு அதிகமான பொருட்கள் எரிந்துள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி தீவிபத்தினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்த அதே வேளை பெருமளவான மக்கள் அங்கு கூடியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ

# காந்தீயம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் ஒக்டோபர் – நவம்பர் இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் மில்க்வைற் அதிபர் கனகராசா பற்றிய அண்ணா தொழிலதிபர் எஸ்.பி. நடராசாவின் நினைவுப்பகிர்வு, மதுரையைச் சேர்ந்த காந்தியக் கல்வியாளர் அமரர் டாக்டர் நாராயணசாமி பற்றிய சரஸ்வதி தம்பிப்பிள்ளையின்அஞ்சலிச்செய்தி, பேராசிரியர் மா.சின்னத்தம்பி சமகாலக் கல்வியில் காந்தியச் சிந்தனைகள் என்ற தலைப்பில் ஆற்றிய காந்தி நினைவுப்பேருரை, அகிம்சைக்கு அண்ணல் காந்திஜி தரும் விளக்கம் உட்படப் பல விடயங்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்விதழின் இலவசப் பிரதியொன்றைப்பெற விரும்பும் அன்பர்கள் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், காந்தீயம், இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும் என காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (இ




# பதவிகளில் உள்ள ஒவ்வொருவரும் மக்களுக்காக உழைக்க வேண்டும்

## முன்னாள் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெறுமனே வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொண்டு சமூகம் பற்றியும் அரசியல் செயற்பாடுகள் பற்றியும் சிந்திக்காமல் இருப்பதால் தான் எமது சமூகம் அபிவிருத்தியில் பின்னடைந்த சமூகமாக சென்று கொண்டிருக்கின்றது. என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

புகையிரத ஊழியர்களாக தெரிவு செய்யப்பட்ட 48 பேருக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. தெரிவான ஊழியர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமனப் பத்திரங்களை வழங்கி வைத்தார், இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஒருங்கிணைப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்

யுத்தத்தை காரணம் காட்டி அதில் நடந்த அழிவுகளுக்கு தண்டனை கிடைக்கவேண்டும் எனக் கூறிக்கொண்டிருந்து பிரதேசத்தினதும் மக்களதும் அபிவிருத்திகளை தடை செய்துகொண்டிருப்பதால் எந்தவிதமான அபிவிருத்திகளையோ உரிமைகளையோ எமது மக்கள் பெற்றுக்கொள்ள முடியாது.

சரியான அரசியல் நிலைப்பாட்டினையும் மக்களைப் பற்றிய சிந்தனை உள்ளவர்களையும் தெளிவாக மக்கள் தீர்மானித்தால் தான் அழிந்து சென்றுகொண்டிருக்கும் எமது சமூக கலாசாரங்களையும் அரசியல் உரிமைகளையும் திடமானதாக அமைத்துக் கொள்ள முடியும்.

இன்று வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வது என்பது வாழ்க்கையை தேடுவதற்கான ஒரு மையப்புள்ளியாகவே நோக்க வேண்டியுள்ளது. இதிலும் அரச நியமனம் பெறுவதென்பது ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளும் பேறாகவே கருதமுடிகின்றது. இந்த இலக்கை நீங்கள் இன்று எட்டியுள்ளீர்கள். உங்கள் சேவை ஒவ்வொரு மனிதனதும் தேவையை பூர்த்திசெய்வதாக அமைய வேண்டும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (இ)

## ஆசிரியர்தினவிழா

(கைதடி)

கைதடி யூப்பிற்றர் கல்வி நிலையத்தின் ஆசிரியர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவ தலைவன் சி.துஸ்யந்தன் தலைமையில் கைதடி கயிற்றசிட்டி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், அப்புத்தளை தொட்டுகல தமிழ்க்கலவன் வித்தியாலய அதிபர் வி.வரதராஜா, கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (இ-2-254)

## விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முதியோர் சுக வாழ்வுக் கழகம் நடத்தும் மூலிகை மருத்துவ முகாமைத்துவம் தொடர்பான விசேட கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இலங்கை வங்கியின் முன்னாள்மாவட்ட முகாமையாளர் க.கணேசமூர்த்தி தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ

## மெருகூட்டப்பட்டுள்ள நெல்லியடிப்பகுதி

(கரணவாய்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகையினை முன்னிட்டு யாழ். மாவட்டம் மெருகூட்டப்பட்டு வருகின்றது.

இதில் நெல்லியடி நகரப்பகுதி எங்கும் பூச்சாடிகள் வைக்கப்பட்டு நீல நிறத் தோற்றத்தில் காட்சியளிக்கின்றது.

இதேவேளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் வர்ணம் பூசி நீல நிறத்துடன் காட்சியளிக்கின்றது.


மேலும் நெல்லியடி சந்தியில் இருந்து வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகள் ஜனாதிபதி வருகையால் தமக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என நம்புகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஆழ்கடல் மீன்பிடியால் இலங்கை மீனவர்களுக்குப் பாதிப்பு

## இந்திய பாதுகாப்பு செயலரிடம் எடுத்துரைத்தார் ஜனாதிபதி மகிந்த



இலங்கையில் தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியில ஈடுபடுவதனால் இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய பாதுகாப்புச் செயலாளர் ஆர்.கே. மதுர் (Mathur), நேற்று முன்தினம் காலை கண்டியிலுள்ள ஜனாதிபதியின் வதிவிடத்தில் ஜனாதிபதியை சந்தித்தார். இரண்டு தெற்காசிய அயலவர்களும் பகிர்ந்து வரும் பலமான நட்பில் இலங்கை -இந்தியாவுக்கிடையிலான பாதுகாப்புத துறைக்கான கூட்டுறவு ஒரு முக்கியமான அம்சம் என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாகப் பேணி வந்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்ட பல்வகைப்பட்ட விடயங்களில் இரு நாடுகளின் பல்வேறு இராணுவப் பிரிவுகளுக்கிடையிலான பயிற்சிகளை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்திய பாதுகாப்புச் செயலாளரும் கலந்துரையாடினர்.

இந்தியாவில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி அனுபவங்கள் சிறப்பான முறையில் அமைந்திருந்ததாக ஜனாதிபதியிடம் மதுர் தெரிவித்தார். இலங்கையிடமிருந்து ஏராளமான பல விடயங்களை நாங்கள் கற்றுக்கொள்ள விரும்புகின்றோம் என மதுர் மேலும் தெரிவித்தார்.

தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, இரு நாடுகளிலுமுள்ள பாதுகாப்புப் பயிற்சி நிறுவனங்களில் வருகை விரிவுரையாளர்களையும், நீண்டகால பயிற்சியாளர்களையும் பரிமாற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை இலங்கையும் இந்தியாவும் ஆராயுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் ஆழ்கடல் மீன்பிடி காரணமாக இலங்கை மீனவர்களால், பிரதானமாக வடக்கு மீனவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார். "சுற்றுச்சூழலின் அழிவு என்பது மிகப் பெரிய பிரச்சினை" என ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

"ஆழ்கடல் மீன்பிடியை நாங்கள் தடை செய்துள்ளோம்". ஆழ் கடல் மீன்பிடி நடைமுறை தொடருமானால் இலங்கை, இந்தியா இரண்டிலுமிருந்து மீன் வளங்கள் முழுமையாக அழிந்துபோகும் என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ராஜபக்ஷ, இலங்கையின் வடக்குப் பகுதியிலுள்ள தமிழ் மீனவர்கள் இதன்காரணமாக அதிகம் பாதிக்கப்படுவர் எனச் சுட்டிக்காட்டினார்.

அதிகாரிகள், பாதிக்கப்பட்ட தரப்புக்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தீர்வொன்றைக் கொண்டுவர உதவும் என இரண்டு தரப்பினரும் நம்பிக்கை வெளியிட்டனர். (இ)


## துயர் பகிர்கின்றோம்



சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம்
(BSc (Hons) col., phD (Edin)
(முன்னாள் பீடாதிபதி, விஞ்ஞான பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)



எமது துறைத் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருமான சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களின் சகோதரியும் விலங்கியல்துறைசார் புலமைமிக்க பேராசிரியரும் அறிவுத் துணிவுடன் சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு தமிழ் மாணவர்களுக்கும் அலைவுற்றுத் திரிந்த மக்களுக்கும் மனிதாபிமானமாக பணியாற்றி வந்தவரும் எமது துறைசார் செயற்பாடுகளில் முதன்மையான துணையாக இருந்தவருமான சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்களை எம் மனதிருத்தி அஞ்சலிக்கின்றோம்.

**சமூகவியல் சமூகம் சமூகவியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(8027)



## மரண அறிவித்தல்

**சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம்**
(BSc (Hons) col., phD (Edin)
**(முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்கு பல்கலைக்கழகம்)**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம் (முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்கள் வெள்ளியன்று (10.10.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த அமரர்களான சபாரத்தினம், லஷ்மிப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும் அமரர்களான நவரத்தினம், ஞானாம்பிகை, கனகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் அமரர் யோகாம்பிகை, அமிர்தவல்லி, அமரர் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் விஜயகுமாரி (ஜெயந்தி) , சுரேந்திரகுமார் ஆகியோரின் சிறிய தாயாரும் சிவகுமார், அமரர் கேதீஸ்வரி, சுசீலா, சுபத்திரா, முருகதாஸ், கண்ணதாஸ், சுகன்யா, ரமணதாஸ் விநாயகதாஸ் ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (12.10.2014) பிற்பகல் இரண்டு மணியளவில் திருநெல்வேலி அம்பலவாணர் பாதை, 'கந்தன் அருள்' இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
(சகோதரன்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(8026)

**'கந்தன் அருள்'**
**அம்பலவாணர் பாதை, திருநெல்வேலி**


## இராசி பலன்

12.10.2014
(புரட்டாதி 26, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.58 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் -12.53 மணிவரை
கார்த்திகை முற்பகல் -8.27 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை
சுபநேரம் -9.02-10.32 மணிவரை

**வளவன்**

**மேடம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர்.

**இடபம்:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சிந்தனை மிகுதியான நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், யாராவது உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம்.

**கடகம்:** உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பணவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தைவழி உறவினரால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், குடும்பத்தில் விட்டுக் கொடுத்து செயற்படுவது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையால் உற்சாகமடைவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவர், ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், சுபகாரியப் பயணங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், பயணங்களால் பலனுண்டு, இனிய அனுபவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுசாரம், புகையிலை தொடர்பிலான

# திருத்த சட்டமூலத்தை அரசு நிராகரிப்பு

## சபையில் கூச்சல் குழப்பம், உறுப்பினரிடையே கருத்து மோதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட 2006ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தை திருத்துவதற்கான திருத்தச்சட்ட மூலத்திற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரி அதனை 14 மேலதிக வாக்குகளால் தோற்கடித்தது.

இதனால் மேற்படி சட்டமூலத்தை சபை ஏற்க மறுத்து விட்டதாக பிரதிசபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலமே இவ்வாறு அரசாங்கத்தால் எதிர்க்கப்பட்டு நிராகரித்து தோற்கடிக்கப்பட்டது.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. சபையின் பிரதான பணிகள் மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் ஆகியவற்றின் பின்னர் பிரேரணை முன்னறிவித்தலுக்கான நேரத்தில் விஜேதாச ராஜபக்ஷ எம்.பி. மேற்படி திருத்தச் சட்ட மூலத்தை சமர்ப்பித்தார்.

**தினேஷ் குறுக்கீடு**

சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலத்தை வழிமொழிவதற்காக சஜித் பிரேமதாச எம்.பி எழுந்த போது குறுக்கீடு செய்த ஆளும் கட்சிப் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன, உறுபபினர் விஜேதாச ராஜபக்ஷ வினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலத்தை எதிர்ப்பதாகவும் சபை இதனை ஏற்றுக்கொள்ள வில்லை என்றும் தெரிவித்தார்.

**சஜித்**

இதன்போது, குறுக்கிட்ட சஜித் பிரேமதாச எம்.பி சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலத்தை வழிமொழிவதற்கு சந்தர்ப்பம் தருமாறு பிரதிசபாநாயகரிடம் கேட்டு நின்றார். எனினும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்ததால் சபையில் அமளி ஏற்பட்டது.

இதன்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஒருமித்து கருத்துக்களை முன்வைத்ததால் சபை அதிர்ந்தது. குழப்பகரமான நிலைமையும் உருவானது. சபையை அமைதிப்படுத்துவதற்காக பிரதி சபாநாயகரால் எடுக்கப்பட்ட முயற்சியும் தோல்வி கண்டது.

இதன்போது, ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய சஜித் பிரமேதாச எம்.பி. திருத்தச்சட்ட மூலப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அதனை வழிமொழிவதற்கான சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அது எனக்கிருக்கும் உரிமையும் கூட என்றார்.

**சந்திம**

சஜித் பிரமேதாச எம்.பி. இவ்வாறு கூறிக்கொண்டிருந்த போது ஆளும் கட்சி தரப்பிலிருந்து வந்த கூச்சல குறையவில்லை. இந்நிலையில் சபையை அமைதிப்படுத்திய பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதற்கும் அதனை வழிமொழிவதற்கும் அதேநேரம் அதனை எதிர்ப்பதற்கும் இந்த சபையின் உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கின்றது எனக்குறிப்பிட்டார்.

**தினேஷ்**

இதன்போது எழுந்த அமைச்சர் தினேஷ்குணவர்த்தன அப்படியாயின் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலப் பிரேரணைக்கு நான் எனது எதிர்ப்பினை தெரிவித்திருக்கின்றேன். அத்துடன் சபையின் அங்கீகாரம் அல்லாவிட்டால் எதிர்ப்பு தொடர்பில் குறித்த திருத்தச்சட்ட மூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்றார்.

**வாக்கெடுப்பு**

இதனையடுத்து திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் வாக்கெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு கோசம் ஒலிக்கப்பட்டது.

இதன்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் மற்றும் எம்.பி. க்கள் என பலரும் சபைக்குள் ஓடி வந்து இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

இதனையடுத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் விஜேதாச ராஜபக்ஷ எம்.பி. யினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலப் பிரேரணைக்கு ஆதரவாக 13 வாக்குகளும் எதிராக 27 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. இதனால் 14 மேலதிக வாக்குகள பிரேரணைக்கு எதிராக கிடைக்கப்பெற்றன. இதனையடுத்து திருத்தச்சட்டமூலமானது 14 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டிருப்பதால் அதனை ஏற்கவில்லை என்பதுடன் நிராகரிப்பதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். (இ)

## புத்தளத்தில் பேருந்து மீது இனந்தெரியாதோர் தாக்குதல் இருவருக்கு காயம்

புத்தளம் கரம்பை பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ள்ளது. இந்த தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை ஐந்து மணிய ளவில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பேருந்து சாரதி உள்ளிட்ட இருவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் காணப்படாத குழுவி னரால் இந்த தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

கல்பிட்டியிலிருந்து அக்கரைப் பற்று நோக்கி பயணித்த பேருந்து மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தாக்குதலில் பேருந்தின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதே மார்க்கத்தில் பயணிக்கும் தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மற்றும் நடத்துநர் இந்த தாக்கு தலை மேற்கொண்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவ ந்துள்ளது.

அதற்கமைய தனியார் பேருந்து சாரதியையும் நடத்துநரையும் கைது செய்வதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேல திக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வழக்கை தாமதம் செய்தவர் பவானிசிங்

### கருணாநிதி குற்றச்சாட்டு



(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையைத் தாமதம் செய்த அரசு தரப்பு சட்டத்தரணி பவானி சிங், என்று திமுக தலைவர் கருணாநிதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பாக திமுக தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பாக தான் எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் மௌனமாக இருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது. இந்த நிலையில், அரசு சட்டத்தரணி பவானி சிங் அளித்த பேட்டியில், குற்றவாளிகளுக்குச் சாதகமாகச் செயற்பட்டதாக திமுகவினர் தன்னை குற்றஞ்சாட்டியதாக பவானி சிங் குறை கூறினர். அதனைத் தீர்ப்பின் மூலம் பொய்யாக்கினேன்.

அதற்கு பிறகும் தன்னை விமர்சிக்கின்றனர். சட்டம் தெரியாதவர்கள் வேண்டுமானால் தன்னை விமர்சிக்கலாம். ஆனால் தான் மனசாட்சியுடன் நடந்துகொண்டேன் என்று அவர் தெரிவித்தார். ஆரம்பத்தில் இருந்தே வழக்கை பவானி சிங் தாமதப்படுத்தியே வந்தார். நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில், அரசு சாட்சிகளின் முதல் விசாரணையை மட்டும் படித்து விட்டு, தனது வாதங்களை பவானி சிங் முடித்துவிட்டார் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார். (இ)

## சீனாவில் நிலச்சரிவு

### 19 பேர் பலி

சீனாவில் சான்சி மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 19 பேர் பலியாகினர். 2 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். சான்சி மாகாண்ணத்தில் தேசிய நெடுஞ்சாலை கட்டுமானப் பணி நடந்து வந்தது. அதற்காக பணியாட்கள் சிலர் அப்பகுதியில் முகாம்களை அமைத்து தங்கியிருந்தனர்.

இந்நிலையில் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் தொழிலாளர்கள் தங்கியிருந்த முகாம்கள் மண் ணில் புதைந்தன. இதில் 21 பேர் சிக்கிக் கொண்டனர். 19 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே இறந்த னர். 2 பேர் மீட்கப்பட்டனர். காயமடைந்த இரு வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

## புத்தசாசன பிரதியமைச்சருக்கு சுவரொட்டி கிழிக்கும் பொறுப்பு

### ஜே.வி.பி.கிண்டல்



(கொழும்பு)

புத்தசாசன பிரதியமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தன வுக்கு ஜே.வி.பி ஒட்டும் சுவரொட்டிகளை கிழிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி யின் இணையத்தளம் கிண்டல் செய்துள்ளது.

பிரதியமைச்சர் திருகோணமலை நகரில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகளை கிழிக்கும் புகைப் படங்களையும் அந்த இணைய த்தளம் வெளியிட்டுள்ளது.

மகிந்தவுக்கு மூன்றாவது முறையாக முடியாது. சட்டவிரோத ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம்! என குறிப்பிட்டு ஜே.வி.பி ஒட்டியி ருந்த சுவரொட்டிகளையே பிரதியமைச்சர் அகற்றி வருகிறார்.

அத்துடன் பொலிஸாரை பயன் படுத்தி. சுவரொட்டிகளை ஒட்டிய ஜே.வி.பியின் உறுப்பினர்களுக்கு தடையேற்படுத்தியதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 80 | 80 |
| தக்காளி | 90 | 70 | 70 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 20-30 | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 100 | 100 |
| பூசணி | 25 | 40 | 30 | 60 |
| புடோல் | 60 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 90 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 100 | 70 |
| பாகற்காய் | 160 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 130 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 100 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 150 | 120 |
| போஞ்சி | 200 | 150 | — | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60-90 | 180 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 15-40 | 30 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 80 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எபோலாவினால் 4033 பேர் பலி!

## நாளுக்கு நாள் அதிகரிக்கிறது மரணம்

எபோலா வைரஸ் நோய் தாக்கத்திற்கு உள்ளாகி இதுவரை 4 ஆயிரத்து 33 பேர் பலியாகியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளான லைபீரியா, நைஜீரியா, கினியா, சியாரா லியோன் ஆகிய 4 நாடுகளில் எபோலா வைரஸ் நோய் கடுமையாக பரவியுள்ளது.

இதேவேளை, செனகல், ஸ்பெயின், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் எபோலா நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

லைபீரியாவில் எபோலா நோய் தாக்கம் அதிகம் உள்ளதுடன் அங்கு பாதிக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்து 76 பேரில் 2 ஆயிரத்து 316 பேர் பலியாகி உள்ளனர். சியாரா லியோனில் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 950 பேரில் 930 பேர் இறந்துள்ளனர்.

கினியாவில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 350 பேரில் 416 பேர் உயிரிழந்துள்ளனர். பலியானவர்களில் 233 சுகாதார பணியாளர்களும் அடங்குவர்நைஜீரியாவில் 20 பேர் எபோலா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 8 பேரும், அமெரிக்கா மற்றும ஸ்பெயினிலும் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

கொங்கோ நாட்டில் எபோலா பாதிக்கப்பட்டுள்ள 71 பேரில் 43 பேர் பலியாகி உள்ளனர். செனகலில் ஒருவர் இறந்துள்ளார்.

உயிர்க்கொல்லி நோயான இதை குணப்படுத்த மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இலங்கையை ஹெலியில் சுற்றிப் பார்க்க முடியும்

சிவில் ஹெலிகொப்டர் சேவையொன்றை அடுத்த வாரத்துக்குள் ஆரம்பிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. வரையறுக்கப்பட்ட ஐ.டபிள்யூ. எஸ்.எவ். யேஷன் தனியார் கம்பனிக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த கம்பனி யின் தலைவர் ஐ.டபிள்யூ. சேனாநாயக்க தெரிவித்தார். சுற்றுலா, உள்நாட்டு விஜயம், வானியல் ஆய்வுகள், ஆகாயத்திலிருந்து புகைப்படம் எடுத்தல், திரைப்படம் தயாரிப்பு, சிவில் விமான நிலையங்களுக்கிடையிலான சேவை, விளையாட்டு மற்றும் செய்தி பெறுவதற்கான அவசரகள விஜயங்கள் என்பவற்றுக்கு இந்த குளிரூட்டப்பட்ட ஹெலிகொப்டர் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். இரத்மலானவிமான நிலையத்திலிருந்து இந்த சேவை முன்னெடுக்கப்படும் எனவும் அக் கம்பனியின் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ)


**காணி விற்பனை**

மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இணுவில் வீதியில் 2 3/4 நிலப் பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 021 225 5136

(சி-8707)

**உடனடியான வேலை வாய்ப்புகள்**

இன்றே அழையுங்கள்... உங்கள் கைகளில் நிரந்தர தொழில் வாய்ப்பைப்பெற 17-55 வயது ஆண்- பெண் இருபாலாருக்கும். "கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஜேம், கோடியல், காமெண்ட், தேயிலை, PVC, கிளவுஸ், பிளாஸ்டிக், மின் உபகரணம் மற்றும் பல தொழிற்சாலைகளில் தயாரிப்பு பிரிவுகளுக்கு லேபல்/ உற்பத்தி/ தரம்பிரித்தல்/ களஞ்சியப்பிரிவு/பொதியிடல் ஆட்சேகரிப்பு உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் வசதி செய்து தரப்படும். (நண்பர்கள்/ குழுக்கள்/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்/ கல்வி, மொழி அவசியமில்லை. சம்பளம் 20000/=, 35000/= மேலதிக விபரம்.

(சி-8713)

கொழும்பு:- 0777889185, 0778128194




**SINGER FINANCE**

இடமிருந்து மட்டுமே

அதிகூடிய கடன் தொகை குறைந்த வட்டிக்கு
இன்றே உங்கள் வாகனத்தை கொண்டு செல்லுங்கள

தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
கலைதேவன 077 3 675 022
சுதன் 077 3 550 018

(சி-8716)

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 36 ½ உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L /சாரதி (டோகா)<br>தொ.இ: B/3512 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 51 ¾ உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, Civil Engineering – Following / எழுது வினைஞர்<br>தொ.இ: G/3510 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 11 ½ சூரி செவ் 10 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ்.இ: B/3514 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 72 ¼<br>தகைமை/தொழில்: B.Com<br>தொ.இ: G/3513 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 11 ¾ செவ் 4 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: HNDA / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/3519 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 64 செவ் 12 ல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3515 |
| பிறப்பு: 1983 கிறிஸ்தவம் (RC)<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Civil Engineering / பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3520 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 39 செவ் 2 ல்<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்: Draftsman, Civil Engineering - Following<br>தொ.இ: G/3517 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

**State Bank of India**

**Branch Manager / Assistant Branch Manager**

Applications are invited from suitably qualified and experienced candidates for the following positions.

**Branch Manager - Jaffna**
Requirements:

- Should possess a minimum of 3 years' experience as a branch manager in a licensed commercial bank in Sri Lanka
- Thorough knowledge in credit management and banking operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university.
- Candidates having professional qualifications like CBF/DBF from IBSL will be preferred.
- Should have flair for marketing and business development.

**Assistant Branch Manager – Jaffna**
Requirements:

- Should possess a minimum of 3 years' experience as an officer in a licensed commercial bank in Sri Lanka
- Thorough knowledge of branch operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university or equivalent professional qualifications.
- Should have flair for marketing and business development.

Selected candidates will be offered a remuneration package commensurate with qualification and experience. Candidates have to furnish in their application the full details of the present salary and expected salary for the post applied for.

Interested candidates may forward their curriculum vitae under registered post, along with photocopies of documents in support of age, qualifications and experience to:


*The Country Head*
**State Bank of India**
*16, Sir Baron Jayatilake Mawatha, Colombo- 01*
*Phone: 444 6800 e mail: careers.lk@statebank.com*
*Visit us at www.sbisrilanka.net*

(சி-8714) Skyline

Serving Sri Lanka since 1864


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யான் விமர்சனம்



நம்ம ஹீரோ ஹீரோயினை சந்திக்கிறார். பணம் எடுக்கப்போன இடத்தில் நாயகி துளசியை பார்த்ததும் மனம் கொடுத்துவிட்டு கண்டதும் காதலில் விழுகிறார் ஜீவா.

அப்புறமென்ன துளசி பின்னால் சுற்றுவதைவிட ஜீவாவுக்கு அப்படி வேற என்ன வேலை இருக்கப் போவது பாஸ். துளசி போகும் இடமெல்லாம் ஜீவாவின் விஜயம் இருந்து கொண்டேயிருக்கிறது. முதல் பாதி முழுவதும் காதலை மையப்படுத்தியே கதை நகர்ந்து கொண்டிருக்க, துளசியின் முறை மாமனாக வந்து சேர்கிறார் ஒருவர். துளசியை எப்படியாவது தனக்கு மனைவியாக்க வேண்டுமென்று திட்டம்போட்டு ஜீவாவை பழிவாங்கி துளசியிடமிருந்து பிரிக்கிறார்.

எக்ஸ் மிலிட்டரி ஆபீசராக நாசர் துளசியின் அப்பாவாக நடித்திருக்கிறார். துளசி, ஜீவா காதலை பற்றி தெரிந்து கொண்டு ஜீவாவை அழைத்து பேசுகிறார். என்ன பன்றீங்க, என்ன படிச்சிருக்கீங்க, என்று கேள்விமேல் கேள்வி கேட்க எல்லாத்துக்கும் நெகட்டிவாகவே பதிலை சொல்லி தன் காதலுக்கு அவரே சங்கு ஊதிவிடுகிறார். வந்தா வேலையோட தான் வருவேன் என்று வீராப்பாக வெளியேறும் ஜீவா, வேலையை தேடி கம்பனி கம்பனியாக அலைகிறார். இதெல்லாம் நமக்கு செட்டாகாது மச்சி நான் வெளிநாடு போறேன் என்று விமானத்தில் ஏதோ ஒரு ஃபாரின் கண்ட்ரிக்கு செல்கிறார் அந்த பேரு கூட வாயில வர மாட்டேங்குதேப்பா (பிசிகிஸ்தான்). வெளிநாடு சென்று விமானத்திலிருந்து இறங்கிய இவரை கையில் விலங்கு மாட்டி ஜெயிலில் அடைக்கிறது பொலிஸ். போதை மருந்து கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு இவருக்கு தண்டனை குறித்து தீர்ப்பும் அளித்துவிடுகிறார் நியாயமான நான்கு அக்மார்க் நீதிபதிகள். அதாவது "நடு தெருவுல ஊர் மக்கள் பார்க்கும்படி தண்டனைக்குரியவரின் தலையை நறுக்கென்று இரண்டாக பிளந்தெடுக்கனுமாம்". நிரபராதி என்று நிரூபிக்க முடியாத சூழ்



நிலை. தனக்காக வாதாட யாருமில்லை என்று காதலியை நினைத்தும, குடும்பத்தை நினைத்தும் ஜெயிலில் கண்ணீரும் கம்பளியுமாக அலைகிறார். ஃபாரின் போன மச்சான் என்ன ஆனார் என்று தெரிந்ததும் என்னால்தான் இந்த நிலைமை ஜீவாவுக்கு ஏற்பட்டுவிட்டது. உடனே அவரை காப்பாற்ற வேண்டுமென குடும்ப எதிர்ப்பையும் மீறி அந்த ஃபாரின் கண்ட்ரிக்கு பறக்கிறார். உலகத்தில் எந்த இடத்துக்குப்போனாலும் அங்கே ஒரு தமிழன் வணக்கம் என்று கூறுவான். அந்த அளவுக்கு ஆல் ஓவர் வேல்ட் தமிழனின் ராஜ்ஜியமாகவே இருக்கிறது. துளசிக்கு உதவ சூதுகவ்வும் கருணா அங்கே இன்ப அதிர்ச்சியோடு எண்ட்ரி ஆகிறார். படத்தின் இரண்டாம்பாதியில் ஆங்காங்கே தொய்வு ஏற்பட்டாலும் ஜெயிலில் நடக்கும் சண்டைக்காட்சி, க்ளைமேக்சில் வரும் பாலைவன காட்சிகள், துளசியை முதன் முதலில் சந்தித்த காட்சியை விளக்கும்விதம் என ரவி.கே.சந்திரன் விளையாடியிருக்கிறார் வாழ்த்துக்கள்! என்றென்றும் புன்னகை படத்தின் வெற்றிக்குப்பிறகு ஜீவா நடித்திருக்கும் படம் யான். படத்தின் கதையில் ஒரு நாள் இருந்தாலும் அதை முழுவதுமாக திரையில் காட்ட பெரும்பாடு பட்டிருக்கி றார் இயக்குநர். முதல் பாதி காதல், இரண்டாம்பாதி ஆக்ஷன் என இரண்டும் கலந்து ஒரு மசாலாவாக கொடுக்காமல் 'டிராவல் ஏஜண்டுகள் குறித்த விழிப்புணர்ச்சியையும் சைட்டு கேப்பில் மெயிண் டிஷ்ஷாக பரிமாறிவிட்டார்'.

# வலைபாயுதே



ஜீ.வி.பிரகாஷ் தன் அம்மாவுடன்



கணவர் ரித்தேஷ் தேஷ்முக்குடன் ஜெனிலியா



என் மகனுக்கு வர வேண்டிய மெசேஜ் இன்னமும் எனக்கு வருது!

## தள்ளிப் போகும் தனுஷ் படம்



வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் "சூதாடி" படம் விரைவில் தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்தப் படத்தின் ஷூட்டிங் தள்ளிப்போடப்பட்டுள்ளது. இதில் நடிக்க தனுஷ் தனது கெட்டப்பை மாற்ற வேண்டியுள்ளது. இப்போது கே.வி.ஆனந்த் இயக்கும் "அனேகன்" படத்தில் தனுஷ் நடித்து வருகிறார். இந்தியில் "ஷமிதாப்" படத்தில் அக்ஷரா ஹாசனுடன் நடித்து வருகிறார். அடுத்து பாலாஜி மோகன் இயக்கும் படத்திலும் நடிக்கிறார். வெற்றிமாறன் படத்துக்கு கெட்டப் மாற்றினால் இந்தப் படங்கள் பாதிக்கும் என்பதால் சில மாதங்கள் காத்திருக்கும்படி வெற்றிமாறனிடம் கூறினாராம் தனுஷ்.

புரொபஷனல் தாண்டிய நட்பு இருவருக்கும் இடையே இருப்பதால் நண்பன் தனுஷ் சொன்னதும் ஓகே சொல்லிவிட்டார் வெற்றிமாறன். "சூதாடி" படத்தை ஜனவரியில் தான் ஆரம்பிக்க உள்ளனர். இதற்கிடையில் குறுகிய கால படைப்பாக "அட்டகத்தி" தினேஷ் நடிக்கும் படத்தை வெற்றிமாறன் இயக்க உள்ளார். இப்படத்துக்கு "குற்ற விசாரணை" என்று டைட்டில் வைத்துள்ளனர்.

## விஜய் படத்தில் ஸ்ரீதேவி, சுதீப் இல்லை!

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய், ஸ்ருதிஹாசன் நடிக்கும் படம் அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தப் படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. இதில் முன்னாள் ஹீரோயின் ஸ்ரீதேவி முக்கிய வேடத்தில் நடிக்க உள்ளதாக தகவல் பரவியது. ஆனால் அவர்



நடிக்கவில்லையாம். ஸ்ரீதேவி நடிப்பதாக வந்த தகவல் எதுவும் உண்மையில்லை என பட வட்டாரங்கள் கூறியுளளன.

வில்லனாக "நான் ஈ" சுதீப் நடிக்க உள்ளதாகவும் கூறப்பட்டது. ஆனால், அவரும் வில்லனாக நடிக்கவில்லையாம். இந்தப் படம் ஃபேண்டஸி த்ரில்லராக உருவாகிறது. விஜய் படங்களிலே இந்தப் படம் வித்தியாசமான கான்செப்ட்டில் இருக்கும் என கூறப்படுகிறது.

## விக்ரமுடன் டான்ஸ் ஆடும் சார்மி!

"காதல் அழிவதில்லை" படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக அறிமுகமானவர் சார்மி. சில தமிழ்ப் படங்களில் நடித்துவிட்டு தெலுங்கு சினிமாவுக்கு சென்றார். அங்கு சிரஞ்சீவி, நாகார்ஜுனா, வெங்கடேஷ், மகேஷ்பாபு, பவன் கல்யாண் உள்ளிட்ட ஸ்டார்களுடன் நடித்து பிரபலமானார்.

திடீரென அங்கே மார்க்கெட் சரிய, தமிழில் மீண்டும் அவரை பிரபு சாலமன் அழைத்து வந்தார். அவர் இயக்கிய "லாடம்" படத்தில் ஹீரோயினாக நடித்தார் சார்மி. இந்தப் படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இதையடுத்து அவருக்கு தமிழில் எதிர்பார்த்த வாய்ப்புகளும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் எந்த டாப் ஹீரோக்களின் படங்களில் தெலுங்கில் நடித்தாரோ அதே ஹீரோக்களின் படங்களில் ஒரு பாடலுக்கு கவர்ச்சி ஆட்டம் ஆட மட்டும் சார்மிக்கு வாய்ப்புகள் வந்தன. அவரும் வேறு வழியில்லாமல் அதை ஏற்றுக்கொண்டார்.

இந்தியில் பிரபுதேவா இயக்கிய "ஆர் ராஜ்குமார்" படத்திலும் ஒரு பாட்டுக்கு குத்தாட்டம் ஆடியிருந்தார் சார்மி. இப்போது தமிழிலும் அதேபோன்ற வாய்ப்பே அவருக்கு கிடைத்துள்ளது. விஜய் மில்டன் இயக்கத்தில் "பத்து எண்றதுக்குள்ள" படத்தில் ஒரு பாட்டுக்கு சார்மி டானஸ் ஆட உள்ளார். இந்த பாடலுக்கான ஷூட்டிங் விரைவில் நடைபெற உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசாங்கத்தை வீழ்த்தும் பொது எதிரணி உருவாக்குவோம்

## மங்கள எம்.பி சூளுரை



அரசாங்கத்தை வீழ்த்தக்கூடிய பலமான எதிரணியினை உருவாக்கும் நோக்கிலேயே எமது நடவடிக்கை அமைந்துள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் போது வேட்பாளர் யார் எனும் துரும்புச்சீட்டினை களத்தில் இறக்குவோம் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சோபித தேரரா? சந்திரிகாவா? ரணிலா? என யாரும் குழம்பத் தேவையில்லை. வெகு விரைவில் விடை கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார். ஜனாதிபதி தேர்தலின் பொது வேட்பாளர் தொடர்பில் எதிர்கட்சிகள் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் சிலரின் பெயர்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியினரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் ஆட்சியினை தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாகும். இம்முறை தேர்தலில் அரசாங்கத்தை வீழ்த்தியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் எதிர் கட்சிகள் முயற்சித்துக்கொண்டிருக்கின்றன. எனினும் சகல எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் பலமானதும் அரசுக்கு சவால் விடுக்கக் கூடியதுமான பொது எதிரணியொன்றினை உருவாக்கும் நோக்கத்திலேயே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதேபோல் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் இறுதியான தீர்மானம் முன்வைக்கப்படாவிட்டாலும் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியினை அரசாங்கம் தெரிவிக்கும் நேரத்தில் நாம் யாரை களமிறக்கப் போகின்றோம் என்பது தெரியவரும். எமது துரும்புச் சீட்டு யார் என்பது அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலானதாக அமையும்.

மேலும், நாம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் தேர்தல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை. அதேபோல் வேறு யாருடனும் பொது வேட்பாளர் தொடர்பில் பேசவுமில்லை. மாதுலுவாவே சோபித தேரரை ஜே.வி.பி யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவை, ரணில் விக்ரமசிங்கவை, சந்திரிகா குமாரதுங்கவை என பலரின் பெயர்களை பொது வேட்பாளராக களமிறக்க பலர் பரிந்துரைத்துள்ளனர். ஆனால், யாரை வேட்பாளராக்கப்போகின்றோம் என்பது வெகு விரைவில் நாம் தெரிவிப்போம். அதற்கான நடவடிக்கைகள் சகல மட்டங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# பொது எதிர்க்கட்சி கூட்டணி பொது சின்னத்தில் போட்டி!

## சரத் வலியுறுத்தல்

ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் மாலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. ஜனநாயக கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், மனோ கணேசனுடன் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்களான எஸ்.ராஜேந்திரன், சண். குகவரதன், பிரியாணி குணரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பின் போது, உத்தேச ஜனாதிபதி தேர்தல் தொடர்பான விடயங்கள் கலந் துரையாடப்பட்டுள்ளன.

பொது எதிரணியின் வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் போட்டியிடுவதையும், அதேவேளை இந்த பொது எதிர்க்கட்சி கூட்டணி ஒரு பொது சின்னத்தில் களமிறங்க வேண்டும் என்பதையும் தான் வலியுறுத்தி வருவதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அத்துடன் கடந்த காலங்களை போல், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் மீதும், பொது எதிர்க்கட்சி கூட்டணியின் மீதும், புலி முத்திரை குத்தி இனவாத பிரசாரத்தை முன்னெடுக்க இந்த அரசுக்கு தான் இடமளிக்க போவதில்லை என்றும், இது தொடர்பான இறுதிநிலைப்பாட்டை உரிய வேளையில் அறிவிப்பதாகவும் சரத் பொன்சேகா கூறியுள்ளதாகவும், ஜனநாயக கட்சியும் ஜனநாயக மக்கள் முன்னணியும், பொது எதிரணியில் காத்திரமான பங்கை கூட்டாக வகிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# காணிகளை விடுவிக்க வாய்ப்பே கிடையாதாம்

## அமைச்சர் கெஹலிய திட்டவட்டம்



வடக்கு மக்களின் காணிகளை இந்த வருட இறுதிக்குள் இராணுவத்தினர் கையளிக்க வேண்டும் என கால நிர்ணயம் விதித்து வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணை நிறைவேற்றியுள்ளது. ஆனால், தனியார் காணிகளோ, அரச காணிகளோ தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய அக்கறை என்று வரும் போது அங்கு விட்டுக்கொடுப்பு என்பதற்கு இடமில்லை." இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். "வடக்கு மாகாண சபை முன்னர் நாட்டின் அரசமைப்புக்கு எதிராகப பிரேரணைகளை நிறைவேற்றியது. இதே போன்று இம்முறை நிறைவேற்றிய பிரேரணைகளும் அரசமைப்புக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் முரணானதா என்று பார்க்க வேண்டும். இவை அரசமைப்புகுஉட்பட்டு இருக்காது என்றேநான கருதுகின்றேன்" என்றும் அவர் தெரிவித்தார். ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# மனவளர்ச்சி குன்றிய பெண் மீது வல்லுறவு

## குடும்பஸ்தருக்கு இரண்டு வருடம் கடூழிய சிறை

(கொழும்பு)

மன வளர்ச்சி குன்றிய, வறிய இளம் பெண் ஒருவரை பல தடவைகள் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கி, ஆண் குழந்தை ஒன்றுக்கு தாயாக்கிய, நான்கு பிள்ளைகளின் தந்தையான நபர் ஒருவருக்கு மட்டக்களப்பு மேல்நீதிமன்றம் பத்து வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட இரு வருட கடூழிய சிறைத் தண்டனையுடன், 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் மேற்படி தீர்ப்பை வழங்கி, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எதிரி, இரண்டரை இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கவேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர் தள வாயைச் சேர்ந்த வறுமையில் வாழும், மனவளர்ச்சி குன்றிய பெண்ணை பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கி, கருத்தரிக்க வைத்தார் என்று கூறி புன்னக்குடா வீதி, தளவாலையைச் சேர்ந்த வேலப்பன் புஸ்பராசா அல்லது சுரேஷ் எனும் நபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 04.10.2013 இல் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு நடைபெற்று வந்தது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில், இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியான வேலப்பன் புஸ்பராசா குற்றத்தை ஏற்றுக் கொணடார்.

இந்நிலையில் எதிரி ஏற்கனவே திருமணம் செய்து தற்பொழுது நான்கு பிள்ளைகளின் தந்தையாகவிருப்பதால் குடும்ப நிலை மற்றும் முன் குற்றமின்மை என்பவற்றை கவனத்தில் கொண்டும், மனவளர்ச்சி குன்றிய பெண்ணுக்குப் பிறந்து தற்போது நான்கு வயதாகவுள்ள ஆண் குழந்தை மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணையும் கவனத்தில் கொண்டும் எதிரியைக் கடுமையாக எச்சரித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (இ)

# மஹர சிறைச்சாலையில் 750 பேர் தடுத்து வைப்பு

## அமைச்சர் கஜதீர தகவல்



மஹர சிறைச்சாலையில் 750 சந்தேக் நபர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அமர்வின் போது இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.யான திஸ்ஸ அத்தநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே மேற்கண்ட தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹர சிறைச்சாலையில் 1922 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 750 பேர் சந்தேக நபர்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு இடநெருக்கடி அல்லது அடிப்படை வசதிகள் குறைவு என்ற வகையிலான பிரச்சினைகள் இருப்பதாக இதுவரையில் முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை. மேலும் இடநெருக்கடிகளை தவிர்க்கும் பொருட்டு யாழ்ப்பாணம், அங்குலாகொல உள்ளிட்ட பிரதேசங்களில் சிறைச்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் விளக்கமறியலில் உள்ள கைதிகளில் பிணை வழங்கக் கூடியவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### ஓய்வூதியப் பணத்தை மோசடி செய்தவர் கைது

63 இலட்சம் ரூபாய் மோசடியில் ஈடுபட்ட, கேகாலை பிரதேச சபை காரியாலயத்தின் ஓய்வூதியப்பிரிவு எழுதுவினைஞர் ஒருவரை இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓய்வூதியம் பெறுபவர்களின் பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக மோசடி செய்து, தனது பெயரிலுள்ள தனிப்பட்ட வங்கிக் கணக்கொன்றில் சேமித்து வைத்திருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

# இலங்கை பெண்ணொருவர் மின்சாரம் பாய்ச்சிக்கொலை

## ஆப்கான் பிரஜை கைது

குவைத்தில் வசித்துவந்த தனது காதலியான 33வயதான இலங்கை பெண்ணை மின்சாரம் பாய்ச்சி கொலை செய்ததாக கூறப்படும் ஆப்கானிஸ்தானியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பஹாலில் பிரதேசத்திலுள்ள இடம்மொன்றில் வைத்தே அந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கை பெண் ணை கொலை செய்ததாக ஆப்கானிஸ்தானியர் ஏற்றுக்கொண்டார் என செய்தி வெளியாகியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணன் செய்த குறும்பு!



அன்று தீபாவளி.

காலையிலிந்தே கண்ணன் மிகவும் சந்தோஷமாக இருந்தான்.

புதுச்சட்டை, புதுபேண்ட் அணிந்து நண்பர்கள் மத்தியில் வலம் வந்தான்.

அவனிடம் இருக்கும் பட்டாசுகளை அவனுடைய நண்பர்களுக்கும் கொடுத்து அவர்களை வெடிக்கச் செய்து மகிழ்வான்.

அதனாலேயே அவனைச் சுற்றி அன்று முழுதும் நண்பர் கூட்டமே இருக்கும்.

அன்றும் அப்படித்தான்.

நண்பர்களோடு சேர்ந்து கொண்டு வீதியில் பட்டாசுகளை வெடித்து போவோர் வருவோரை பயமுறுத்தி மகிழ்ந்தான்.

அவன் பட்டாசு வெடிக்கும்போது அந்த சத்தம் கேட்டு வயதானவர்கள் புலம்புவதை அவன் சுற்றும் காது கொடுத்து கவனிக்கமாட்டான்.

சில நேரங்களில் வெறும் காகிதத்தை மட்டும் பட்டாசு போல் சுற்றி வைத்து வத்தியில் நெருப்பு வைப்பதுபோல் பாசாங்கு செய்வான்.

உண்மையிலேயே அவன் பட்டாசு தான் கொளுத்துகின்றானோ என்றெண்ணி வீதியின் இரண்டு பக்கமும் காதுகளையும் கண்களையும் இறுக மூடி நிற்பதைக் கண்டு கேலி செய்து குலுங்கக் குலுங்கச் சிரிப்பான்.

அவனுடன் அவனுடைய நண்பர்களும் சேர்ந்து சிரிப்பார்கள்.

அப்போது அவர்கள் அவனைத் திட்டிவிட்டுப் போவார்கள். அவன் அதையும் ரசித்துச் சிரிப்பான்.

அவன் செய்யும் குறும்புகளை அவனுடைய அம்மா அகிலாண்டத்திடம் யாராவது முறையிட்டால் அவள், ஒரே பிள்ளை என்று செல்லமாக வளர்த்துவிட்டேன். நான் கண்டிக்கிறேன் என்று அப்போதைக்கு சொல்லிச் சமாளிப்பாள்.

அவள் சொல்லும் வார்த்தைகளை அவன் கேட்கவே மாட்டான்.

வெளிநாட்டில் இருக்கும் அவனுடைய தந்தை அவனுக்கு எந்த குறையும் இல்லாமல் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுத்து முரட்டுப் பையனாக வளர்க்கச் செய்துவிட்டார்.

அவன் கொட்டாங்குச்சியில் ஒளித்து வைத்து வெடித்த யானை வெடி அந்தக் கொட்டாங்குச்சியைச் சுக்குநூறாக்கிச் சிதறச் செய்தது.

யார் சொல்லையும் அவன் கேட்கமாட்டான் என்பதைத் தெரிந்து கொண்ட வழிப்போக்கர்கள் ஒதுங்கியே போயினர்.

அவனுடைய தாய்க்கு அவனைத் திருத்த வழி தெரியாமல் இருந்தாள்.

காலையிலிருந்து இப்படியும் அப்படியும் ஓடி ஓடி பட்டாசுகளைக் கொளுத்தியதில் சோர்ந்துபோன கண்ணன் தன் நண்பர்களுடன் எதிர் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

ஏதோதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்களில் சட்டென அவனுடைய வீட்டு நாய் பட்டது. சுற்றிலும் கேட்ட வெடிச் சத்தத்தால் மிரண்டுபோய் கதவிடுக்கு வழியாக சாலையைப் பார்த்தபடி படுத்திருந்தது அந்த நாய்.

யார் வந்தாலும் குரைக்காமல் சோம்பேறியாய்ப் படுத்திருக்கும் அந்த நாயை அவன் எப்பொழுமே அடித்துத் துன்புறுத்துவது வழக்கம். மூன்று வேளையும் சாப்பிட்டுவிட்டு பேசாமல் படுத்திருக்கும் அந்த நாயை எப்படியாவது விரட்டிவிட வேண்டுமென்று அவன் பலமுறை முயற்சி செய்துள்ளான்.

தூரமாக இழுத்துப்போய் மூன்று நான்கு கிராமங்கள் தாண்டி விட்டுவிட்டு வந்தாலும்கூட எப்படியோ வீடு தேடி திரும்பி வந்துவிடும்.

இன்று அவனுக்குத் தன் நாயைப் பார்த்தவுடன் புதிய திட்டம் உதயமானது.

டேய் ஒரு ஐடியா. நான் மெல்ல எங்கள் வீட்டு நாயை அழைத்து ஏதாவது சாப்பிடச் செய்கிறேன். அந்த நேரத்தில் அதோ தெரிகிறதே உடைந்து போன தகரடப்பா. அதை எடுத்து வந்த நாயின் இடுப்பில் ஒரு கயிற்றைச் சுற்றிக் கட்டிவிடுவோம். பாலு நீ இந்த பட்டாசை கொளுத்தி வெடிக்கச் செய். சத்தம் கேட்டதும் நாய் கண்மண் தெரியாமல் எங்காவது ஓடிப் போய்விடும் என்றான்.

நண்பர்களும் ஒப்புக்கொண்டனர்.

தகரடப்பாவை எடுத்து வர ரகு போய் விட்டான்.

கண்ணன் தன் வீட்டு நாயை அழைத்தான். அது வாலை ஆட்டிக் கொண்டே வந்து அவனிடம் நின்றது.

தன் கையில் வைத்திருந்த இனிப்புப் பலகாரத்தை கண்ணன் அதன் வாய்க்கருகில் போட்டான். நாயும் வாலை ஆட்டிக்கொண்டே தின்ன ஆரம்பித்தது. ஓசைப்படாமல் ரகு கொண்டு வந்து தந்த தகரடப்பாவை அருகில் கிடந்த சணல் கயிற்றில் கட்டி நாயின் வயிற்றுப் பகுதியில் ஒரு சுற்றுச் சுற்றிக் கட்டிவிட்டான். *(தொடரும்)*

## 10.2014 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 539 - பாரசீகத்தின் மகா சைரசின் இராணுவம் பாபிலோனைப் பிடித்தது.
- 1492 - கொலம்பஸ் கரிபியனில் பஹாமாசை அடைந்தார். அவர் கிழக்காசியாவைத்தான் அடைந்ததாக எண்ணினார்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1785 - ரிச்சார்ட் ஜான்சன் என்பவர் தமிழ்நாட்டின் முதல் செய்திப்பத்திரிகையான மெட்ராஸ் கூரியர் என்ற வார இதழை வெளியிட்டார்.
- 1798 - இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக (King's Colony) அறிவிக்கப்பட்டது. பிரெட்ரிக் நோர்த் ஆளுநராக ஆக்கப்பட்டார்.
- 1899 - தென்னாபிரிக்காவின் போவர் குடியரசு இங்கிலாந்து மீது போரை அறிவித்தது.
- 1964 - சோவியத் ஒன்றியம் வஸ்கோத் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது. இதுவே பல விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்ற முதலாவது கப்பலாகும்.
- 1968 - எக்குவட்டோரியல் கினி ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1976 - மறைந்த மா சே துங்கின் இடத்திற்கு ஹுவா குவோஃபெங்க் என்பவரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக நியமிப்பதாக மக்கள் சீனக் குடியரசு அறிவித்தது.
- 1984 - ஐ.ஆர்.ஏ குண்டுவெடிப்பில் இருந்து மார்கரெட் தாட்சர் காயமெதுவும் அடையாமல் உயிர் தப்பினார்.
- 1993 - இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டது.
- 1994 - மகெலன் விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்தை அடைந்ததை அடுத்து அதனுடனான தொடர்புகளை நாசா இழந்தது. இது அடுத்தடுத்த நாட்களில் எரிந்து சேதமடைந்தது.
- 1999 - பாகிஸ்தானில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியில் பெர்வேஸ் முஷாரஃப் நவாஸ் ஷெரீப்பை ஆட்சியில் இருந்து அகற்றி நாட்டின் அதிபரானார்.
- 1999 - உலகின் மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.
- 2001 - அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.
- 2005 - சீனாவின் இரண்டாவது ஆட்களுடன் கூடிய விண்கலம் சென்ஷோ 6 இரண்டு விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1891 - எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (இ. 1956)
- 1921 - ஆர்ட் குலொக்கி, களிமண்ணால் செய்யப்படும் இயங்குபடங்களின் முன்னோடி (இ. 2010)
- 1918 - கே.கே.பிர்லா, இந்தியாவின் தொழிலதிபர் (இ. 2008)
- 1935 - லூசியானோ பாவ்ராட்டி, இத்தாலியப் பாடகர் (இ. 2007)

### இறப்புகள்

- 1605 - பேரரசர் அக்பர், முகலாயப் பேரரசின் மன்னர் (பி. 1542)
- 1870 - ராபர்ட் ஈ. லீ, அமெரிக்க இராணுவத் தளபதியும் பொறியியலாளரும் (பி. 1807)
- 1924 - அனத்தோலி பிரான்ஸ், பிரெஞ்சு எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1844)
- 1965 - போல் ஹேர்மன் முல்லர், சுவிட்சர்லாந்து வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)
- 1999 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர் (பி. 1936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்


## மெய் வருத்தம் பாரார்!

92

..ஆனால், அவரால் 6 மற்றும் 29 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இந்தியா 212 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்தது.

இந்தியப் பாகிஸ்தான் போட்டிகளில் சச்சின் சாதனைகள் ஒருபுறம் இருந்தாலும் கும்ப்ளே ஒரு சாதனையைச் செய்து தனது பெயரை கிரிக்கெட் வரலாற்றில் பதிவு செய்து கொண்டார். ஆம், இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தானின் பத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தியவர்கள் ஜிம் லேகர் மற்றும் கும்ப்ளே மட்டுமே.

சில வாரங்களுக்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையே முத்தரப்பு போட்டிகள் நடந்தன. முதல் டெஸ்ட் இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு



இடையே ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. முதல் இரண்டு நாட்கள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ரசிகர்கள் கூடினர். ஆனால், கடைசி நாள் மைதானம் காலியாகக் காட்சி அளித்தது. காரணம் ஜெயிக்க வேண்டிய அந்தப் போட்டியில் விக்கெட்களுக்கு இடையே ரன்களைக் குவிக்க சச்சின் ஓடிக்கொண்டிருந்தார். அப்போது அக்தர் வேண்டுமென்றே அவர் மீது மோதியதால் தடுமாறிய சச்சின் க்ரீஸை நெருங்குவதற்குள் சச்சின் ரன் அவுட் ஆனார். இந்த ரன் அவுட் சர்ச்சையைக் கிளப்பவே மூன்றாவது அம்பயர் முடிவிற்கு விடப்பட்டது. எதிர்பாராத விதமாக சச்சின் அவுட் கொடுக்கப்பட ஈடன் மைதானமே பாகிஸ்தானியர் குறிப்பாக அக்தர் மீது ஆரஞ்சு தோல், தண்ணீர் பாட்டில், பேப்பர் அனைத்தையும் வீசத்தொடங்கியது. எனவே, சச்சின் மைதானம் முழுவதும் வலம் வந்து கூட்டத்தை சமாதானப்படுத்தினார். சச்சின் ஆட்டம் இழந்தவுடனேயே இந்தியா தோற்கும் என்பது தெரிந்த ஒன்றுதான். கடைசி விக்கெட்டை வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

23 மார்ச் 1999 ஆம் ஆண்டு சச்சினின் மகுடத்தில் இன்னொரு வைரம் பதிக்கப்பட்டது. அப்போதைய குடியரசுத் தலைவர் சச்சினுக்கு பத்ம ஸ்ரீ பட்டம் வழங்கி கௌரவித்தார். உன்னைப் பார்த்து பெருமைப்படுகிறேன். உனது பணியைத் தொடர்ந்து செய் என்று ஜனாதிபதி நாராயணன் கூறியதை சச்சின் இன்றும் நினைவு கொள்கிறார்.

அடுத்து உலகக் கோப்பைக்கான போட்டிகளுக்கு உலக நாடுகள் தயாராகிக் கொண்டிருந்தன. ஆனால், சச்சினின் முதுகுவலியோ நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது To Be or Not To Be என்ற ஷேக்ஸ்பியரின் பிரபல நாடக வசனம் போன்று.

சச்சின் விளையாடுவாரா மாட்டாரா என்ற கேள்வி இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள ரசிகர்கள் மத்தியில் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

முதுகுவலிக்காக இங்கிலாந்து நிபுணரிடம் பரிசோதனை செய்து கொண்டார் சச்சின். ரசிகர்கள் வயிற்றில் பாலை வார்க்கும் செய்தியாக சச்சின் உலகக் கோப்பை போட்டிகளில் பங்கு கொள்ளலாம் என்னும் இனிப்பாக செய்தியை இங்கிலாந்து நிபுணர் உறுதி செய்தார். முதுகுவலி சரியானவுடன் நிமிர்ந்தது சச்சின் மட்டுமல்ல இந்திய அணியும்தான்.

(தொடரும்)

கே. ரமேஷ்

உலகக் கோப்பைக்கான போட்டிகளுக்கு உலக நாடுகள் தயாராகிக் கொண்டிருந்தன. ஆனால், சச்சினின் முதுகு வலியோ நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது To Be or Not To Beஎன்ற ஷேக்ஸ்பியரின் பிரபல நாடகன வசனம் போன்று சச்சின் விளையாடுவாரா மாட்டாரா என்ற கேள்வி இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள ரசிகர்கள் மத்தியில் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

## ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...அதேபோல் உண்மையான அன்பு நிகழ, நீங்கள்; உங்களிடம் விழிப்புணர்வு, தெளிவு, ஒரு ஆழ்ந்து புரிந்து கொள்ளும் தன்மை ஆகியவற்றை உருவாக்கினால் அது உங்களுள் மலரும்.

ஒரு கல்லூரிக் கூட்டத்தில் ஒரு மாணவி என்னிடம் கேட்டாள் ஸ்வாமிஜி நீங்கள் ஸந்யாசி ஆவதற்குக் காதல் தோல்விதான் காரணமா? நான் சொன்னேன் காதலின் வெற்றிதான் நான் ஸந்யாசி ஆனதற்குக் காரணம் என்று.



காதல் தோல்வி ஒரு தேவாதஸைத் தான் உருவாக்கும், ஸந்யாசியை அல்ல! நீங்கள் இந்த உலகம் முழுவதையும் நேசிக்கும் பொழுதுதான் ஒரு ஸந்யாசி ஆக முடியும்! இந்த உலகம் முழுவதையும் உங்களால் நேசிக்க முடியுமானால் மட்டுமே, அது உண்மையான அன்பாகிறது.

உண்மையான அன்பிற்கு உறவுகள் தெரியாது. சாதாரண அன்பு மட்டுமே உறவுகளை அறியும். சாதாரண அன்பில், உங்கள் தந்தை உங்களுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதால் நீங்கள் அவரிடம் அன்பு செலுத்துகிறீர்கள். உங்கள் அன்னை உங்களை நன்றாகப் பார்த்துக் கொள்வதால் நீங்கள் அவளிடம் அன்பு செலுத்துகிறீர்கள். புலனின்பத்தைத் தருவதால் நீங்கள் உங்கள் காதலனிடம் அன்பு செலுத்துகிறீர்கள். இவை சாதாரண அன்பிற்கான வெவ்வேறு காரணங்கள்.

உண்மையான அன்பு அது போன்றது அல்ல. அது ஓ! இது என் தந்தை. நான் அவரை நேசிக்க வேண்டும்... என்று சொல்வதில்லை. இல்லை! அதற்கு எல்லோர் மீதும், எல்லாவற்றின் மீதும் அன்பு செலுத்திக்கொண்டே இருக்கத் தெரியும். அவ்வளவுதான். சாதாரண அன்பில் வெற்றி தோல்விகள் இருக்கும். உண்மையான அன்பில் வெற்றியோ, தோல்வியோ இல்லை. அது வெறுமனே இருக்கிறது. அவ்வளவுதான். அதைக் கண்டுபிடிப்பதில் தான் வெற்றி இருக்கிறது!

வேறு எதுவும் சரிப்படவில்லையென்றால், காதல் என்பது வாழ்க்கையில் இல்லாமல் போய்விட்டால், நீங்கள் ஸந்யாசியாகிவிடுகிறீர்கள் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஸந்யாசிகள் விரக்தியால் வாழ்க்கையைத் துறந்தவர்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறார்கள். இவ்வாறு சொல்லும் மக்களை நினைக்கும் பொழுது நான் வருத்தமடைகிறேன். அவர்கள் ஆழமான அறியாமையில் இருக்கிறார்கள். இதுபோன்ற அறியாமையில் இருந்து கொண்டு அவர்கள் மற்றவர்களை எடைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஸந்யாசம் என்பது இறுதியான திருமணம்- தெய்வீகத்துடனான திருமணம்! ஒரு உண்மையான ஸந்யாசியானவன் மிகவும் அன்பானவனாகவும் கருணையுடையவனாகவும்

### ஆன்மீகம் 42

இருக்கிறான். அவன் நடக்குமிடங்களில் புற்கள் வாடிப்போவதில்லை என்று சொல்லப்படுகிறது. இது கதையல்ல; உண்மை. ஒரு உண்மையான ஸந்யாசி இயற்கையை நோக்கி அன்பையும் கருணை யையும் வெளிப்படுத்துகிறான். எவனொருவன் உண்மையான ஸந்யாசியோ அவனுக்கு அன்பு என்பது பிரார்த்தனை என்பதும் பிரார்த்தனை என்பது அன்பு என்பதும் தெரியும்.


நீங்கள் உண்மையான அன்பைக் கண்டுபிடித்துவிட்டால் உங்கள் பிரார்த்தனை என்பது அதன் வெளிப்பாடாக இருக்கும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பொறி...



**"05.10.2014 ஞாயிறு வலம்புரியில் வெளிவந்த "கடன்பொறி" என்ற கதையில் வந்த குறிப்பிட்ட பெண்ணின் நிலை பற்றி பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களிடம் கேட்டோம். அவர் பேட்டியில் தந்த கருத்துக்கள் இங்கே பிரசுரமாகிறது."**

1. பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களே, கடன் பிரச்சினையால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு பின்னர் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு சிகிச்சையளித்தவர் என்ற முறையில் தங்களிடம் அதுபற்றி சில கேள்விகளை கேட்க விரும்புகின்றோம். இப்போது அவரின் நிலை எப்படியிருக்கின்றது?

அந்தக் குறிப்பிட்ட பெண மணிக்கு தேவையான சிகிச்சைகளை மேற்கொண்டோம. அவர் உளரீதியாக சில தாக்கங்களுக்குட்பட்டிருந்ததால், உள வளத்துணையும் வழங்க வேண்டியிருந்தது. அடிப்படையில் குறித்த பெண்மணி கடன் பிரச்சினையால் ஏற்பட்ட தொடர்ச்சியான நெருக்கடியை சமாளிக்க முடியாமலே தற்கொலை முடிவையெடுத்தார்.

ஆனால் தற்காலிகமானதோர் தீர்வாக அவரால் எடுக்கப்பட்ட இந்த முடிவின் பின்னணியில், அவர் அடிமனதிலிருந்த எதிர்பார்ப்பு மற்றும் ஆசைகளை நிறைவேற்றுவதற்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள் எதுவும் சரியான முறையில் கைகூடவில்லை என்பதே காரணமாகின்றது. நடந்து முடிந்த யுத்தத்தின் பின்னர் சொத்துக்களையும், செல்வங்களையும் இழந்து மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள மக்கள் தாங்கள் இழந்த சொத்துககளை எப்படியாவது பெறறுக்கொள்ளவேண்டும்என்ற அவாவில் இவ்வாறான கடன் பிரச்சினைகளில் சிக்கிவிடுகின்றனர். தாம் இழந்த சொத்துக்களை உடனடியாக மீட்க வேண்டும் என்ற அதீத ஆசையுடன் பாதிக்கப்படக்கூடிய நிலையிருக்கின்ற மக்களை இவ்வாறான கடன் நிறுவனங்களும், வங்கிகளும், லீசிங் கம்பனிகளும் அவர்கள் கடனைத்திருப்பிச் செலுத்தக் கூடியவர்களா? எதற்காக கடன் எடுக்கிறார்கள்? ஏதாவது வருமானப்பெருக்கச் செயற்பாட்டிற்கா? உண்மையில் அதற்குப்பயன் படுத்துவார்களா? என்பனவெல்லாம் முதலிலேயே மதிப்பீடு செய்யப்பட வேண்டும். சரியான முறையில் மதீப்பீடு செய்யப்பட்டு வழங்கப்படும் கடன்கள் மக்களின் வாழ்வாதார வருமானத்திற்கும் அவர்களின் முனனேற்றத்திற்கும் தேவை. அவை கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். சரியான மதிப்பீடு, கண்காணிப்பின்றிய கடன்களைக் கொடுத்து மேலும் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலைக்கே கொண்டு செல்கின்றனர். அதற்குள் சிக்கிய குறித்த பெண்ணும் தன் மகனின் மோட்டர்சைக்கிள் கனவு, தன்னுடைய வீடு பற்றிய கனவு என்பவற்றை நிறைவேற்றுவதற்காக பலமுறைகளில் கடன்களை பெற்று ஏற்கனவே இருந்த மனநிம்மதியையும் இழந்துவிட்டார்.

2. கடன் கொடுக்கும் நிறுவனங்கள் கையாளுகின்ற முறைகளில் தவறு இருக்கின்றது என்று கருதுகின்றீர்களா?

பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருக்கின்ற இவ்வாறான மக்களை மீண்டும் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில், இவ்வாறான கடன்களைக் கொடுத்து மீண்டும் கட்டமுடியாத நிலைக்குகொண்டு செலுத்திவிடுவது சமூக நியமங்களுக்குஅப்பாற்பட்ட ஓர் செயலாகவே நான் கருதுகின்றேன். முதலாளித்துவ பொருளாதாரமுறை என்ற ரீதியில் பார்கரும்போது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் மனித நேய அடிப்படையில் பார்க்கும்போது தவறானதென்றே கூறமுடியும்.



அதாவது இலாபத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு, தாங்கள் முதலீடு செய்த மூலதனத்தையும் வட்டியையும் பெற்றுக் கொள்வதில் மாத்திரம் அக்கறை கொள்ளும் நிறுவனங்கள் அதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை கவனத்தில் கொள்வதில்லை. இவ்வாறான பொருளாதார முறையானது நிறுவனங்களுக்கு நன்மைபயப்பதாக அமையுமே அன்றி, தனிநபர், சமூக மட்டத்தில் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புக்களை அறிவதில்லை. அதிலும் இக்கடன் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக வேலைக்கமர்த்தப் பட்டுள்ள இளைஞர்கள், குறிபிட்ட கடன் கொடுப்பனவு பற்றிய பூரண அறிவைக் கொண்டிருக்காததுடன், மக்களுக்கு வெளிப்படையாக தங்கள் நடைமுறைகளை விளங்கப்படுத்துவதும் கிடையாது. பாவம்! அவர்களுக்கும் சிலவிடயங்களில் தெளிவிருப்பதில்லை. வேலைவாய்ப்புத் தேவையின் அடிப்படையில் தெரிவான அவர்கள் தங்கள் முன்னேற்றங்களை கருத்திற் கொண்டு உற்சாகத்துடன் மக்கள் மத்தியில் சென்று இவ்வாறான கடன் திட்டங்களை அறிமுகம் செய்கின்றனர்.

மக்களும் தங்களுடைய அவசர உடனடித்தேவைகளை நிறைவேற்றுவதற்காக அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி சரியான திட்டமிடலின்றி கடன்களை பெற்றுவிடுகின்றனர். ஒரு சில வங்கிகள் கடன் திட்டங்களை வழங்கும் போது தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்கில் இறுக்கமானகட்டுப்பாடுகள், அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக்கையெழுத்துக்கள் என்று சரியான ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செயற்பட்டு வருகின்றன, அவை வரவேற்கத்தக்கது. ஆனாலும் தனியார் நிறுவனங்கள் சில கிராம மட்டத்தில் இறங்கிச் சென்று மக்களுக்கு கடன் திட்டங்கள் பற்றிச் சிறுபிரசாரங்களைச் செய்து [illegible] அவர்களை கடன் பொறிக்குள் சிக்க வைக்கின்ற நிலையும் காணப்படுவது கவலைக்குரியது.

குறிப்பாக சில நிறுவனங்கள் கிராமமட்டத்தில் குழுக் கடன் முறை என்று சில கடன் திட்டங்களை அறிமுகம் செய்து ஏற்கனவே பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் அடிமட்ட நிலையிருக்கின்ற மக்களிடம் அதிக வட்டியை அறவிட்டு ஒரு வகையான சுரண்டல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. உண்மையில் அவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட கடனுக்கு மேலதிகமான பணத்தை வடடியாகக் கொடுக்கும் போது எவ்வளவு நெருக்கடியை சந்திப்பார்கள்? அதுமட்டுமன்றி கிராமமட்டத்திலிருக்கின்ற பாரம்பரிய உறவுமுறை இணைப்பிலும் விரிசல் ஏற்படுகன்றது. மனஉளைச்சலை ஏற்படுத்துகின்றது. இறுதியில் இவ்வாறான தற்கொலை முயற்சிகளும் 'இடம் பெறுகின்றன.

## பிரச்சினைகளுக்குத் தீர்வாக தற்கொலை; சரியான முடிவா?

3. எங்களுடைய சமூகத்தில், "பிரச்சினைகளுக்கு தீர்வாக தற்கொலை செய்து கொள்வது" சற்று அதிகரித்துச் செல்கின்றதே. இது பற்றிய உங்கள கருத்தைக் கூறமுடியுமா?

துரதிர்ஷ்டவசமாக எங்களுடைய சமூகத்தில் தற்கொலை எண்ணங்களும், முயற்சிகளும், தற்கொலைகளும் கொஞ்சம் அதிகமாக ஏற்படுகின்றன. தமிழ் சமுதாயத்தில் பிரச்சினைகளுக்கு ஓர் தீர்வாக மிக எளிதில் தோன்றுவது தற்கொலையாகத்தான் இருக்கின்றது. குறிப்பாக ஏற்கனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குள் அகப்பட்டு வந்த மக்கள் தமக்கு ஏற்படுகின்ற திடீர் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாது மிக விரைவாக தற்கொலையில் ஈடுபடுகின்றனர். பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளில் கடன் பிரச்சினையாலும் மக்கள் இவ்வாறான தவறான முயற்சிகளில் ஈடுபட்டு தற்கொலை செய்துகொள்கின்றனர்.

ஒப்பீட்டு ரீதியில் பார்த்தால் முஸ்லிம் மக்களிடையே இவ்வாறான தற்கொலை பற்றிய எண்ணங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்களின் மனங்களில் தற்கொலை பற்றிய எண்ணங்கள் உடனடியாகவே தோன்றுகின்றன. சாதாரண சிறு குடும்பப் பிரச்சினைகளுக்கே இயல்பாக "தற்கொலை செயது கொள்வேன்" என்ற சொற்பாவனை இளம் சமூகத்தினரிடம் காணப்படுகின்றது. அதே நேரத்தில் தற்கொலை செய்து கொண்ட ஒருவரை வீரச்செயல் புரிந்ததாக மற்றவர்கள் பாராட்டிப் பேசுவதும் எங்களுடைய சமூகத்தில் காணப்படும் செயலாகவுள்ளது. அடிப்படையில்தற்கொலை செய்து கொள்வது மிகவும் இழிவானசெயல் என்று எங்களமனதில்பதியப்பட வேண்டும்.

முன்னைய காலங்களில் மக்கள் தங்களுக்குள்ளே குழுக்களாக இணைந்து, பணத்தை முதலிட்டு அதனைச் சீட்டு முறையில் பங்கிட்டு வந்தனர். அதன் போது மக்கள் மனதில் கூட்டு முயற்சியும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து. ஒருவர் கஷ்டத்துக்கு ஒருவர் உதவிசெய்கின்றோம் என்ற மனநிறைவுடன் இருந்தனர்.

ஆனால் இப்போது இவ்வாறான பலகடன் திட்டங்கள் நடைமுறைக்கு வந்தவுடன் தங்கள் தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்து கொள்வதற்காக தங்கள் நிலையை உணராது மக்கள் கடன் பொறிக்குள் சிக்கிவிடுகின்றனர்.

இவ்வாறான நெருக்கீடுகளுக்கு முகம்கொடுத்துக்கொண்டிருக்கின்ற தனி நபர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடாமல் இருப்பதற்கு வேண்டிய முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நாங்கள் செய்ய முடியும். அதனை உளவளத்துணை மூலமாக வேண்டிய யுக்திகளை பயன்படுத்தி மேற்கொள்ளமுடியும். அதேநேரம் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு அவருடைய மனதில் மாற்றத்தை ஏற்படுத்தி, நம்பிக்கையை கட்டியெழுப்பி, அவருடைய திறன்களை அவராகவே கண்டறிய வைப்பதன் மூலமாக அவருக்கு உதவி செய்ய முடியும். ஆனாலும் சமூக மட்டத்தில் இவ்வாறான மாற்றங்களை கொண்டு வருவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். சமயத்தலைவர்கள், கல்விமான்கள், பாடசாலை, பல்கலைக்கழக சமூகத்தவர்கள், கிராம மட்ட பெரியோர்கள் என்று நாம் எல்லோரும் இணைந்து எங்கள் சமூகத்தில் ஏற்படுகின்ற இத்தகைய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு வழிமுறைகளைக்கண்டறிய வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

6. இந்நேர்காணலில் உங்கள் பரிந்துரைகள் பற்றிக் குறிப்பிடமுடியுமா?

சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற பல சமூகப்பிரச்சினைகள் பற்றி நாம் பேசுகின்றோம். அவற்றுக்கு நல்லதோர் முடிவு கிடைக்கவேண்டும் என்று பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வுகளை மேற்கொள்ளுகின்றோம். அதே போன்றே பிரச்சினைகளாகத்தான். இவ்வாறான கடன் பிரச்சினைகளால் மக்கள் தங்கி வாழும் நிலையும். தற்கொலை முயற்சிகளும் இருக்கின்றன. மக்கள் "தாம் சுரண்டப்படுகின்றோம்" என்ற நிலையில் விழிப்படைய வேண்டும். கடன் கொடுக்கும் நிறுவனங்களும் இலாபங்களை மாத்திரம் பெறுவதோடு நின்றுவிடாமல், தங்கள் செயற்பாடுகளை மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு நன்மையாவது கிட்டும் வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

போருக்குப்பின்னர் கட்டியெழுப்பப்படுகின்ற பொருளாதாரமுறைகள் மக்களை நன்ன்மக்கு இட்டுச் செல்வனவாக இருக்கின்றதா? என்பது தொடர்பில் பொருளியல் அறிஞர்கள், புத்திஜீவிகள் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும்.

### சாந்திகம் ஊடகக்குழு

வாசகர்களிடமிருந்து கேள்விகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை பதில்களுடன் வலம்புரியில் பிரசுரிக்கப்படும்.

எழுதி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி


**சாந்திகம்**
**8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரிநல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**
**Email: psych@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 நாட்களாக வெளியே வரவில்லை

# வடகொரியா தலைவர் எங்கே?

### கட்சியின் ஆண்டு விழாவில் பங்கேற்காததால் பரபரப்பு



வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் 40 நாட்களாக வெளியே வரவில்லை. கட்சியன் ஆண்டு விழாவிலும் அவர் பங்கேற்காததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

**ஒரு குடும்ப ஆட்சி**

கொரியா, வடகொரியா, தென்கொரியா என 1948 ஆம் ஆண்டு பிளவுபட்டது முதல், வடகொரியாவில் ஒரு குடும்ப ஆட்சியே நடைபெறு கிறது. முதலில் கிம் இல் சுங் ஆட்சி செய்து வந்தார். 46 ஆண்டு காலம் அவர் ஆண் டார். அவருக்கு பின்னர் அவரது மகன் கிம் ஜாங் இல் 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். அவர் 17 ஆண்டு காலம் ஆட்சி நடத்தினார். அவரது மரணத்துக்கு பின்னர் அவரது மகன் கிம் ஜாங் அன் (வயது 31) 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் தகதி ஆட்சிக்கு வந்தார்.

இந்தக் குடும்பம் வடகொரியாவில் சர்வாதிகார ஆட்சி நடத்தினாலும், மக்கள் அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளனர்.

**கடைசியாக பங்கேற்ற நிகழ்ச்சி**

இந்த நிலையில் வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் இப்போது பொது நிகழ்ச்சிகளில் தோன்றாமல் இருந்து வருகிறார். அவர் கடைசியாக கடந்த செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி தனது மனைவியுடன் ஒரு இசை நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அதுவே அவர் கலந்து கொண்ட கடைசி பொது நிகழ்ச்சி ஆகும்.

**பாராளுமன்றத்துக்கு வரவில்லை**

அந்த மாதக் கடைசியில் நடந்த பாராளுமன்ற கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ளவில்லை. இது பல்வேறு யூகங்களை எழுப்பியுள்ளது.

அவர் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனால அவர் உடல் நலமில்லாமல் இருப்பதாக அரசு தொலைகாட்சி கடந்த மாதம் செய்தி வெளியிட்டது.

**கட்சியின் ஆண்டு விழா**


இந்த நிலையில், அவரது தொழிலாளர் கட்சியின் 69 ஆவது ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது. வழக்கமாக இந்த நாளில் அவர் தனது தாத்தா கிம் இல் சுங், தந்தை கிம் ஜாங் இல் ஆகியோரின் கல்லறைக்கு சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துவது வழக்கம்.

ஆனால் வழக்கத்துக்கு மாறாக நேற்று அவர் அங்கு செல்லவில்லை. அந்த நினைவிடத்தில் மரியாதை செலுத்தும் தலைவர்கள் பட்டியலில் அவரது பெயர் இடம்பெறவில்லை. இருப்பினும் அவரது பெயர் தாங்கிய மலர்க் கூடை மட்டும் அந்த நினைவுச் சின்னத்தில் வைக்கப்பட்டது.

இதனால் அவர் என்ன ஆனார் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இதுவரை கட்சியின் ஆண்டு விழாவில் பங்கேற்காமல் இருநததில்லை. இந்த நிலையில், நேற்று அவர் பங்கேற்காததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (இ)

## நோபல் பரிசு வழங்கும் நிகழ்வின் போது இரு பிரதமர்களும் பங்கேற்க வேண்டும்

### மலாலா கோரிக்கை



நோபல் பரிசு பெறும் விழாவில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் ஆகிய இரு தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவதாக நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் தெரிவித்தார்.

உலக அளவில் வழங்கப்படும் மிகப்பெரிய பரிசு நோபல் பரிசு ஆகும். டைன மைட் வெடிமருந்தை கண்டு பிடித்த ஆல்பிரட் நோபல் என்பவரின் பெயரில் இந்த பரிசு வழங்கப்படுகிறது.

நோபல் பரிசு குழு ஒவ்வொரு ஆண்டும், மருத்துவம், வேதியியல், இயற்பியல், பொருளாதாரம், இலக்கியம், உலக அமைதி ஆகிய துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களை தேர்ந்து எடுத்து நோபல் பரிசு வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு இந்தியாவைச் சேர்ந்த பிரபல சமூக ஆர்வலரான 60 வயது கைலாஷ் சத்யார்த்திக்கும், 17 வயது பாகிஸ்தானிய சிறுமி மலாலாவுக்கும் கூட்டாக வழங்குவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து லண்டனில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப் சாய்(வயது 17) கூறியதாவது, அமைதிக் கான நோபல் பரிசை நாங்கள் பெறும் போது நவாஷ் ஷெரீப்பும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் ஒன்றாக கலந்து கொள்ள வேண்டும் என நானை வேண்டு கோள் விடுக்கிறேன். எனது வேண்டுகோள் கேட்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என நம்புகிறேன் என்று தெரிவித்தார்.(இ)

## தலைவர் பிரபா மரணிக்கவில்லை

புலிப்பார்வை திரைப்படத்தின் இயக்குநர் பிரவீன் காந்தி தமிழீழ விடுதலைப் புலிகளின தலைவர் பிரபாகரன் இறக்கவில்லை. அவர் ஒரு மாவீரன் எனத் தெரிவித்துள்ளார்.


இந்த தீபாவளி அன்று ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்பிற்கு உரிய படமான புலிப்பார்வை வெளிவரவிருக்கிறது.

இப்படம் குறித்து பல சுவாரசியமான மற்றும் சுவையான தகவலை தந்துள்ளார் இயக்குநர். இதில் பிரபாகரன வருவாரா? என்ற கேள்விக்கு மிகவும் ஆச்சரியம் தரும் பதிலை சொல்லி எல்லோரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளார் புலிப்பார்வை இயக்குநர் பிரவீன் காந்தி. (இ)

# பாக். அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்கிறது

### நெரிசலில் சிக்கி 7 பேர் பலி;42 பேர் படுகாயம்!





(முல்தான்)

பாகிஸ்தானின் முல்தான் நகரில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் பாக்.முஸ்லம் லீக் கட்சி ஆட்சி நடக்கிறது. பிரதமராக நவாஸ் ஷெரீப் உள்ளார். பாகிஸ்தான் முக் கிய எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் கிரிக்கெட் வீரரு மான இம்ரான்கான், நவாஸ் ஷெரீப் அரசுக்கெதிராக பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகிறார். அவரது ஆதரவாளர்கள் தலைநகரில் உள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களை ஆக்கிரமித்து உள்ளனர்.

இந்த நிலையில்; நேற்று முன்தினம் முல்தான் நகரில் அரசுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. அப்போது இம்ரான்கான் பேசுகையில்,

நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி 7 பேர் பலியாயினர். 42 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டனர். (இ)

## ராமர் கோயில் கட்டும் திட்டத்தை பா.ஜ.கட்சி மறந்து விடவில்லை

### உமாபாரதி கருத்தால் சர்ச்சை



அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் திட்டத்தை பா.ஜ.க. மறந்து விடவில்லை என்று மத்திய அமைச்சர் உமாபாரதி கூறியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிர சட்டப் பேரவை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள அவர் ஔரங்காபாத்தில் செய்தியாளர்களை சந்தித்த போது இதனை தெரிவித்தார். மகாராஷ்டிராவில் தனிப பெரும்பான்மையுடன் பா.ஜ.க. ஆட்சி அமைக்க உள்ளதாகவும், கூட்டணி ஆட்சியை மக்கள் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மதச் சார்பின்மை தற்போது பின்னுக்கு தள்ளப்பட்டு நாட்டின் வளர்ச்சி மட்டுமே முக்கிய பிரச்சினையாக கருதப்படுவதாக உமா பாரதி தெரிவித்தார்.

அதேநேரம் ராமஜென்ம பூமியான அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் திட்டத்தை பா.ஜ.க. மறந்து விடவில்லை என்றும் அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுபற்றி கருத்து தெரிவித்த காங்கிரஸ் கட்சி நாட்டு மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த பா.ஜ.க. முயல்வதாக கூறியுள்ளது. சர்ச்சைக்குரிய ராமர் கோயில் கட்டும் விவகாரத்தை பாரதிய ஜனதா மீண்டும் கையில் எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ரஜனியை தமிழகத்தின் முதல்வராக்க மோடி திட்டம்!

நடிகர் ரஜனியை பாரதிய ஜனதா கட்சிக்கு கொண்டு வருவதில் அந்தக்கட்சியின் மேலிடத் தலைவர்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். ஐதராபாத்தில் தங்கியிருக்கும் ரஜனியிடம் பா.ஜ.க. தலைவர் அமித்ஷா பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார.

இதைத் தொடர்ந்து, ரசிகர் மன்ற முக்கிய நிர்வாகிகளுடன இரகசிய கருத்து கேட்பு நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ரஜனி அரசியலுக்கு வரவேண்டும். இதேவேளை அவர் பா.ஜ.கவில் சேர்ந்தால் மிகுந்த மகிழ்ச்சி என்று அந்தக் கட்சியின் நிர் வாகிகள வெளிப்படையாக அழைப்பு விடுத்து வருகின்றனர்.

சமீபத்தில் கொலு விழாவை காரணமாக வைத்து ரஜனி வீட்டுக்கு சென்ற பா.ஜ.க. மாநிலத தலைவர் தமிழிசை சௌந்தர ராஜன், ரஜனியின் மனைவி லதாவுடன் சுமார் ஒரு மணி நேரம் அரசியல் விவ காரங்கள் குறித்துப் பேசினார். இதைத் தொடர்ந்து ரஜனி பா.ஜ.கவில் சேர்வாரா? அல்லது தனிக்கட்சி தொடங்குவாரா? என்பது குறித்து பலத்த விவாதங்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் தற்போது லிங்கா படப்பிடிப்புக்காக ஐதராபாத்தில் இருக்கும் ரஜனியுடன் பா.ஜ.க. தேசியத் தலைவர் அமித்ஷா தொலைபேசியில் பேசியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் குறித்து ஏற்கனவே அமித்ஷா 3 முறை ரஜனிகாந்திடம பேசியிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. எனினும் ரஜனி, தான அரசியலுக்கு வரமாட்டேன என்று சொல்லவில்லை. காலம் கனியட்டும் என்று மட்டுமே சொல்லியிருக்கிறார். குறிப்பாக, பிரதமர் மோடி இதில் ஆர்வமாக இருக்கிறார். எப்படியும் நீங்களே முதலமைச்சர் வேட்பாளர் என்று அமித்ஷா ரஜினியிடம் கூறியுள்ளார். இதனைய டுத்து ரஜனியும், படப்பிடிப்பு முடியட்டும் உறுதியான பதில் சொல்கிறேன் என்று கூறியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்திய-பாக். துப்பாக்கி மோதல் ஓய்ந்துள்ளது

கடந்த 9 நாட்களாக இந்தியாவின் காஷ்மீர் எல் லைப் பகுதியில் தொடர்ந்தும் இந்தியப் படையினருக்கும் பாகிஸ்தானிய படையினருக்கும் இடையே நடைபெற்று வந்த கடுமையான துப்பாக்கிச் சண்டை தற்போது குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப்பகுதியிலுள்ள இந்தியாவின் கதுவா மாவட்டத்தில் மட்டும் 4 எல்லைக் காவல் நிலைகள் மீது பாகிஸ்தான் படையினர் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு மற்றும் சம்பா மாவட்டங்களின் அருகே எந்தவொரு துப்பாக்கிச் சண்டையும் இடம பெறவில்லை.

சர்வதேச எல்லையில் அமைந்துள்ள ஜம்மு மற்றும் சம்பா மாவட்டங்களில் ஒக்டோபர் மாதம் 9 ,10 ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட இரவில துப்பாக்கிச் சூடு எதுவும் நடக்கவில்லை என்று எல்லைப் பாதுகாப்புப் படையதிகாரி ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், சர்வதேச எல்லையில் அமைந்துள்ள கதுவா மாவட்டத்தில் உள்ள நான்கு எல்லைக் பொலிஸ் நிலையங்கள் மீது சுமார் 20 நிமிடங்களுக்கு பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி யதாகவும் ஆனால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

**9 ஆம் நாள் மோதலில் 8 இந்தியர்கள், 11 பாகிஸ்தானியர்கள் பலி!**

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் கடந்த 9 நாட்களாக நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில் 8 இந்தியர்களும் 11 பாகிஸ்தானியர்களுமக கொல்லப்பட்டனர்.

இந்திய தரப்பில் 13 பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உட்பட 90 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் டசின் கணக்கான மோதல் தவிர்ப்பு ஒப்பந்த மீறல்கள் நடந்துள்ளன.

2003 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் கைச்சாத்திட்ட மோதல் தவிர்ப்பு உடன்படிக் கையை மீறுகின்ற மிக மோசமான சம்பவங்களில் ஒன்றாக இந்த மோதல்கள் கருதப்பட்டன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பகம் இழக்கும் விசாரணை!

வடக்கு, கிழக்கில் போர் இடம்பெற்ற காலத்தில் காணாமல் போனோர் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் தொடர்கின்ற நிலையில், அதுபற்றிய சர்ச்சைகளும் சந்தேகங்களும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்ட போதே, இது பக்கச்சார்பற்ற வகையில் நம்பகமான முறையில் செயற்படுமா என்ற கேள்வி முன்வைக்கப்பட்டிருந்தது. ஏனென்றால், இதற்கு முன்னர் இலங்கையில் அமைக்கப்பட்ட எந்தவொரு விசாரணை ஆணைக்குழுவுமே, தமிழ் மக்களின் நம்பகத்தன்மையை பெற்றிருக்கவில்லை. எனவே, இது நியாயமான முறையில் விசாரணைகளை நடத்தி, உரிய தீர்வை வழங்குமா என்ற கேள்வி எழுந்தது. எனினும், ஆணைக்குழுவொன்றின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, அதன் முடிவுகள் வெளியிடப்படும்வரை, நம்பகத்தனமையை முற்றிலுமாக கேள்விக்குட்படுத்துவது நியாயமற்றதே.

என்றாலும், காணாமல் போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள், பல்வேறு கட்டங்களை தாண்டியுள்ள நிலையிலும், பொதுமக்களின்து நம்பிக்கையை பெறுமளவுக்கு நடந்துகொள்ளவில்லை என்பது முக்கியமானது.

அதிலும், அண்மைக்காலமாக காணாமல் போனோர் குறித்த ஆணைக்குழுவின் விசாரணைகளின் போக்கில் மாற்றங்கள் இருப்பதாகவும் குறைபாடுகள் அதிகரிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கடைசியாக கடந்தமாத இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 04 நாட்கள் நடந்த விசாரணையின்போது அதிகளவு மொழிபெயர்ப்புக் குறைபாடுகள் இருந்தன என்ற குற்றச்சாட்டும் படையினரின் தலையீடுகள் இருந்தன என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளன.

அத்துடன், முழங்காவில் மற்றும் பூநகரி பிரதேசங்களில் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது, ஆணைக்குழுவின்மீது பொதுமக்கள் நம்பிக்கை வைக்கக்கூடியளவுக்கு செயற்பாடுகள் அமையவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாகவே இருக்கிறது.

முழங்காவிலில் நடத்தப்பட்ட விசாரணை அமர்வில், இராணுவத்தினருக்கு சொந்தமான கோப்பைகளில் அதுவும் இராணுவச்சின்னம் பொறிக்கப்பட்ட கோப்பைகளில் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கும் தேநீர் விநியோகிக்கப்பட்டது.

பொதுப்படையான, பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை நடத்தும் ஆணைக்குழுவினர், குற்றச்சாட்டுக்குள்ளான ஒரு தரப்பினருடன் உறவைப் பேணுவதோ, அவர்களின் எநதப் பொருளையும் நுகர்வதோ தவறானது.

உதாரணத்துக்கு, நீதிமன்றத்தில் குற்றவாளியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவரின உடைமையில், விசாரணையை மேற்கொள்ளும் நீதிபதி ஒருவர், தேநீர் அருந்தினால் அதை எந்த நாட்டின் நீதித்துறையாவது ஏற்றுக்கொள்ளுமா?

அதுபோலவே, முழங்காவிலில் விசாரணை அமர்வின்போது ஆணைக்குழு, தேநீருக்குக்கூட இராணுவத்தினரின் தயவிலேயே தங்கியிருந்தது. தமக்கான தேநீரைக் கூட, சுதந்திரமான ஒரு தரப்பிடமிருந்து பெற்றுக் கொண்ட ஒரு ஆணைக்குழு, சுதந்திரமான தீர்ப்பை மட்டும் எவ்வாறு வழங்குமென்பது முக்கிய கேள்வி.

பூநகரியில் இடம்பெற்ற அமர்வின்போது, ஆணைக்குழுவின் விசாரணைகளில் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகளவில் இருந்தன. வீடு வீடாகச் சென்ற படையினர், விடுதலைப்புலிகளுக்கு எதிராக சாட்சியமளிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியதுடன், அவர்களை வாகனங்களில் ஏற்றி வந்து இறக்கியதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

அதுமட்டுமன்றி, விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, பொதுமக்களோடு பொதுமக்களாக இராணுவப் புலனாய்வாளரகளும்கலந்திருந்தனர். அதேவேளை, வெளியே சீருடையணிந்த படையினரும் குவிக்கப்படடிருந்தனர். இது சாட்சியமளிக்க வந்தவர்களை கலக்கமடையச் செய்திருந்தது.

இது தொடர்பாக, ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகமவுக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர் அதிகாரியொருவரை அழைத்து, படையினரை விலகிச் செல்லுமாறு உத்தரவிட்டிருந்தார். அதற்கான ஒளிப்பட ஆதாரங்கள் அங்கிருந்த ஊடகவியலாளர்களால் வெளியிடப்பட்டன.

ஆனால், ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, விசாரணையின் போது படையினரின் தலையீடு இருந்த தான குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள் ளார். அதற்கு அவர் கொடுத்துள்ள விளக்க மும் விந்தையானது.

அங்கு நின்ற படையினர் ரோந்து சென்றவர்கள் என்றும் அவர்கள் விசாரணையில் குறுக்கிடவில்லையென்றும் அவர் கூறியிருப்பதுடன், பொதுமக்களை சாட்சியமளிக்குமாறு படையினர் நிர்ப்பந்திக்கவில்லை, ஊக்கமளித்தனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுமக்களை சாட்சியமளிக்குமாறு ஊக்குவிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டிய தேவை படையினருக்கு இல்லை. அதுவும், குற்றஞ்சாட்டப்படும் ஒரு தரப்பாக இருப்பவர்கள், பொதுமக்களை சாட்சியமளிக்க செல்லுமாறு ஊக்கமளிப்பதென்பது நியாயமான விசாரணைகளை எடுத்துக்காட்டாது.

விசாரணைகளில் பக்கச்சார்பின்மையும் நேர்மையும் இருக்கவேண்டுமானால், அதில சம்பந்தப்பட்ட தரப்பினரின் தலையீடுகள் எந்தவொரு கட்டத்திலும் இருக்கலாகாது. ஆனால, காணாமல் போனோர் குறித்த விசாரணை அமர்வுகளில் அத்தகைய தலையீடுகள் மிகையாக உள்ளதென்றே கருதப்படுகிறது.

மேலும், இந்த ஆணைக்குழு சுதந்திரமானதாக இருந்தால், படையினர் மீதான குற்றச்சாட்டுக்களை நியாயப்படுத்த வேண்டிய தேவையில்லை. இதன் செயற்பாடுகளை அவதானிக்கின்றபோது, படையினரின் செயலை நியாயப்படுத்துவதற்காக செயற்படும் ஒரு ஆணைக்குழு போலவே செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

விசாரணைகளின்போது, ஏராளமான மொழிபெயர்ப்பு தவறுகள் நிகழ்வதாக ஊடகங்களால் குற்றம் சுமத்தப்பட்ட அதேவேளை, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் அதைச் சுட்டிக்காட்டியிருந்தது. அதையும்கூட ஆணைக்குழுவின் தலைவர் நிராகரித்திருந்தார். ஆணைக்குழுவின் தலைவர் மொழிபெயர்ப்பு தவறு நேரவில்லையென்று உறுதிபடக் கூறுவதற்கு அவர் ஒன்றும் தமிழரல்ல.

ஆணைக்குழுவில் இடம்பெற்றிருந்த 03 உறுப்பினர்களில் ஒருவரான மனோ இராமநாதன் கிளிநொச்சி அமர்வுகளில் பங்கேற்றிருந்தால், உறுதியாக அத்தகைய தவறுகள் நிகழவில்லையென்று நிராகரித்திருக்கலாம். ஆனால், அவர் பங்கேற்காத சூழலில், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் முன்வைத்த குற்றசசாட்டை ஆணைக்குழு எந்த அடிப்படையில் நிராகரித்துள்ளது என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அதைவிட, ஆணைக்குழுவின் அமர்வுகளில் அண்மைக்காலமாக காணாமல் போனவர்கள் விவகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அதாவது போர்க்குற்றங்கள் இடம்பெற்றனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையிலான கேள்விகளையும் ஆணைக்குழுவினர் எழுப்பி வருகின்றனர். அண்மையில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சியில் இடம்பெற்ற அமர்வுகளின்போது இத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் மனித கவசங்களாக பயன்படுத்தினரா, பொதுமக்களை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினரா, தப்பி வரும்போது விடுதலைப் புலிகள் சுட்டனரா என்பன போன்ற கேள்விகளும் ஆணைக்குழுவினரால் எழுப்பப்படுகின்றன.

காணாமல்போன சிலருடைய சம்பவங்களுடன் இத்தகைய கேள்விகளுக்கு தொடர்பிருந்தாலும், இன்னும் பலருடைய காணாமல் போன சம்பவங்களுக்கும் இத்தகைய கேள்விகளுக்கும் தொடர்புகளில்லை. சாட்சியமளிப்போரிடம் ஆணைக்குழு எழுப்பும் இத்தகைய கேள்விகள், அடுத்தகட்ட விசாரணைக்கான அவர்களின்முன்னோட்டமாகவே கருதப்படுகிறது.

இதே ஆணைக்குழுவிடம்தான், போர்க் குற்றங்கள் இடம்பெற்றனவா என்று விசாரிக்கும் பொறுப்பையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்படைத்திருக்கிறார். அந்த வகையில், இந்தக் கேள்விகள் பொருத்தமுடையதாக இருந்தாலும், காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணையில், இத்தகைய கேள்விகளால் பயன்கிட்டப்போவதில்லை. அது நேரத்தை வீணடிப்பதற்கே பயன்படும். ஏனென்றால், ஆணைக்குழுவிடம் காணாமல் போனவர்கள் குறித்த சுமார் 20 ஆயிரம் முறைப்பாடுகள் உள்ளன. இவற்றில் சுமார் ஆயிரம் வரையான முறைப்பாடுகள் குறித்தே சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன.



இதே கதியில் சாட்சியங்களை பதிவுசெய்யும் பணி முன்னெடுக்கப்பட்டால், இன்னும் இரண்டு ஜனாதிபதிகளின் பதவிக்காலம் முடிந்தாலும்கூட, இந்த ஆணைக்குழுவின் விசாரணை முடிவுக்கு வராது. இத்தகைய நிலையில், தேவையற்ற கேள்விகளுக்கு நேரத்தை வீணடிப்பது பொருத்தமுடைய செயலாக பார்க்கப்படவில்லை.

அத்துடன், இவ்விசாரணைகளின்போது போர்க்குற்றங்கள் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டாலும், அவற்றுக்குரிய பதில், போர்க குற்றம் குறித்த விசாரணை அறிக்கையில் இடம்பெறப்போவதில்லை. ஏனென்றால், ஜனாதிபதியின் அந்த ஆணையின் மீது விசாரணையை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவேயில்லை.

இந்த ஆணைக்குழுவே போர்க்குற்றங்கள் இடம்பெற்றனவா என்றும் விசாரிக்கப் போகிறது என்றாலும்கூட, அதுபற்றிய வினாககளை தொடுக்கவேண்டிய தேவை இவ்விசாரணையில் எழவில்லை.

மேலும், காணாமல் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவுக்கு, போர்க்குற்றங்கள் குறித்தும் விசாரிக்கும் ஆணையை அரசாங்கம் பிறப்பித்தபோது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆலோசனை நிபுணர்கள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

முதலில் அமெரிக்க, பிரித்தானிய நிபுணர்களைக்கொண்ட 03 பேர் இந்த ஆலோசனைக்குழுவில் நியமிக்கப்பட்டனர். சேர் டெஸ்மன்ட் டி சில்வா தலைமையிலான இக் குழுவில், பின்னர் இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டாஸ் கௌஷலும் பாகிஸ்தான் சட்டநிபுணர் அஹ்மர் பிலால் சூபியும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இந்த நிபுணர்குழுவினர், இலங்கைக்கு வந்து ஆணைக்குழுவுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவர் என்றும் கூறப்பட்டது. அத்துடன், காணாமல் போனோர் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக்குழுவின் அமர்வுகளில் பார்வையாளராக பங்கேறபர் என்றும் கூறப்பட்டது.

ஆனால், இதுவரையில் இந்த ஆலோசனைக் குழுவின் தலைவர் சேர் டெஸ்மன் டி சில்வா மட்டுமே இலங்கை வந்து ஆலோசனை வழங்கும் பணிகளில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டாஸ் கௌஷலும் பாகிஸ்தான் சட்டநிபுணர் அஹ்மர் பிலால் சூபியும் சேர் டெஸ்மன்ட் டி சில்வாவுடன் இணைந்து அண்மையில் தம்மை சந்தித்ததாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

அந்த நிபுணர்குழுவினர், ஆணைக்குழுவின் சாட்சிய அமர்வுகளில் பங்கேற்க விரும்பவில்லையென்றும் அது தமக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறுகின்ற செயலென்று அவர்கள் தெரிவித்துவிட்டதாகவும் மக்ஸ்வெல் பரணகம கூறியிருந்தார்.

ஆனால், இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டாஸ் கௌஷல், ஏற்கெனவே தமக்கு கூடுதலான பணி ஒதுக்கப்படுமென்று எதிர்பார்ப்பை வெளியிட்டிருந்தார். இலங்கைக்கு வந்துசென்ற பின்னரே, அவருக்கு தாம் ஒரு வட்டத்தினுள் மட்டுமே நிற்கவேண்டு மென்பது புரிந்தது. அதுமட்டுமன்றி, நிபுணர் குழு வழங்கும் ஆலோசனைகளை ஆணைக் குழு தேவைப பட்டால் மட்டுமே பயன்படுத்தப்படுமென்றும், இல்லையேல் அவை தூக்கி வீசப்படுமென்றும் உண்மை புரிந்தது.

அதனாலேயே அவர், கொழும்பு வந்து சென்ற பின்னர், தமக்கு அதிகமான பணி ஒதுக்கப்படவேண்டுமென்றும் தமது யோசனைகள் நிராகரிக்கப்பட்டால் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதில் அர்த்தமில்லையென்றும் தெரிவித்திருந்தார். பாகிஸ்தான் சட்டநிபுணர் பிலால் சூபியும் கூட, தமக்கான பணி வரையறுக்கப்பட்டதாக உள்ளதென்றே குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியங்களை அவதானிக்கவோ, பாதிக்கப்பட்டவர்களை சந்திக்கவோ, விசாரணையில் தலையிடவோ தமக்கு உரிமை இல்லையென்றும் அவர் கூறியிருப்பது அதிருப்தியையே வெளிப்படுத்துகிறது.

ஒருபக்கத்தில் மக்ஸ்வெல் பரணகம, ஆணைக்குழு விசாரணைகளில் பங்கேற்க விரும்பவில்லையென்று கூறியிருக்கிறார். ஆனால், இந்திய, பாகிஸ்தான் நிபுணர்களோ அதற்கான உரிமை தமக்கு வழங்கப்படவில்லையென்று கூறியிருக்கின்றனர். இவை முரண்பட்ட கருத்துக்களாகவே தோன்றுகின்றன. இவற்றின் மூலம், வெளிநாட்டு நிபுணர் குழுவை வெறும் கறிவேப்பிலையாகவே ஆணைக்குழுவும் அரசாங்கமும் பயன்படுத்த எத்தனிக்கின்றன என்பது புலனாகிறது.

முன்னதாக, சர்வதேச சட்டங்கள் குறித்து தமக்கு எல்லா அறிவும் கிடையாதென்பதால், அதுபற்றி ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை நியமிக்குமாறு தாமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியதாக குறிப்பிட்டிருந்தார் மக்ஸ்வெல் பரணகம. இப்போது என்னவென்றால், நிபுணர்குழுவின் ஆலோசனைகள் பொருத்தமானவையென்றால் மட்டுமே கருத்திற்கொள்வோம் என்று கூறியிருக்கிறார்.

இது மட்டுமன்றி, ஆலோசனைக்குழுவில் இடம்பெற்றுள்ள மற்றைய 02 நிபுணர்களான பேராசிரியர் கிறேன் மற்றும் சேர் ஜெப்ரி நைஸ் ஆகியோர் இன்னமும் இலங்கைக்கு வரவுமில்லை. அவர்களை வரவழைக்க முயற்சிக்கவுமில்லை. ஆனால், அரசாங்கம், வெளியுலகில் காணாமல் போனோர் குறித்து விசாரிக்க சர்வதேச நிபுணர்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக கூறிக்கொள்கிறது.

எனினும், அவ்வாறு நியமிக்கப்பட்ட நிபுணர்குழு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்ற கேள்விக்கு எப்பதிலும் இல்லை. இவ்வாறாக காணாமல் போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையையோ, பக்கச்சார்பின்மையையோ கொண்டிருப்பதாக கூற முடியாத நிலையேயுள்ளது.

பொறுப்புக்கூறல் சம்பந்தமான எந்தவொரு விசாரணையும் நடுநிலையாக, பக்கச்சார்பின்றி, சுதந்திரமாக, வெளிப்படையானதாக இடம்பெறவேண்டுமென்பதே, சர்வதேச சமூகத்தினது இறுக்கமான நிலைப்பாடாக உள்ளது. இந்நிலையில், சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறுவதற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், அத்தகைய எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தவறினால், இத்தகைய ஆணைக்குழுக்களை அரசாங்கம் நியமித்ததன் நோக்கமே, சிதைந்துபோய்விடும்.

அதுபோலவே, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பகத்தன்மையையும் ஆணைக்குழு இழந்துவிடுமானால், அது நல்லிணக்கத்துக்கு உதவுமொன்றாகவும் அமையப்போவதில்லை. அத்தகைய சூழ்நிலையொன்று தோன்றுவதற்கான அறிகுறிகளையே ஆணைக்குழுவின் அண்மைய செயற்பாடுகள் குறிப்புணர்த்தி நிற்கின்றன என்பது கவலைக்குரிய விடயமே.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்

## கடைகள் எரிப்பு



(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சில கோரிக்கைகளை நிறைவேற்று மாறு கடந்த சில தினங்களாக சத்தியாக் கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பலாங்கொடை பம்பாஹரினவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் 11 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இரண்டு கடைகளும் ஒரு முச்சக்கரவண்டியும் தாக்குதலின் போது சேதமாக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாத கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ)

# அ'புரம் விமானப் படை முகாம் மீதான தாக்குதல்

## சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

அனுராதபுரம் விமானப் படை முகாம் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினருக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது நீதிபதி சுவர்ணாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய வடுதலைப் புலிகளின் மேலும் 4 உறுப்பினரகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நீதிபதி அனுமதி வழங்கினார்.

நீதிமன்றத்தில் கருத்து வெளியிட்ட குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள். புலிகளின் இந்த தாக்குதலில் அனுராதபுரம் விமானப்படை முகாமுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாக கூறினர்.

இத்தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டதுடன். மேலும் பலர் காயமடைந்தனர். 10 விமானங்கள் முற்றாக அழிந்தன. 6 விமானங்கள் பாதியளவில் சேதமடைந்தன.

இதனால். குற்றவாளிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகையில் திருத்தங்களை செய்ய வேண்டியது அவசியம் என குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் குற்றப்பத்திரிகையில் திருத்தங்களை செய்ய நீதிபதி அனுமதி வழங்கினார். (இ)

# நாடாளுமன்றை அவமரியாதை செய்யும் தமிழ் உறுப்பினர்கள்-அஸ்வர்



தமிழ் உறுப்பினர்கள் நாடாளுமன்றை அவமரியாதை செய்து வருவதாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் வாகன்ங்களைப் பெற்றுக்கொண்டு. நாடாளுமன்றில் சாப்பிட்டு விட்டு நாடாளுமன்றை அவமரியாதை செய்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

நாம் தேர்தல்களுக்கு அஞ்சியதில்லை. வடக்கில் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தினோம்.

நாட்டில் ஜனநாயகம் ஒரே விதமாக வியாபித்துள்ளது. யாழ்தேவி புகையிரதம் மீண்டும் யாழ்ப்பாணம் வரையில் பயணிக்க உள்ளது. யாழ்ப்பாணம் இன்று அபிவிருத்தி அடைந்துள்ளது.

யாழ்ப்பாண மக்கள் சமாதானத்தின் பிரதிபலன்களை அனுபவிக்கின்றார்கள். பொருட்கள் சேவைகளுக்கான விலைகளை குறைத்து ஆளும் கட்சி மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 250 ரூபாவினால் குறைத்துள்ளதுடன் மின்சார கட்டணத்தையும் குறைத்துள்ளது.

இதன்மூலம் அரசாங்கம் நிவாரணத்தை மக்களுக்கு வழங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அபிவிருத்தியின் பயன்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை

## ஐ.தே.க.எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

அபிவிருத்தியின் பயன்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எவ்வளவு அபிவிருத்தி மேற்கொள்ளப் பட்டாலும் அது மக்களினால் உணரப்பட வில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமுர்த்தித்திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் தெரிவித்தார்.

பணம் உள்ளவர்களின் பணம் அதிகரித்துள்ளது. வறியவர்களின் வறுமை மேலும் மேலும் அதிகரித்துள்ளது.

அபிவிருத்தியின் பலன்கள் அனைத்து மக்களையும் சென்றடையவில்லை. அபிவிருத்தியின் பயன் மக்களினால் உணரக் கூடிய வகையில் இருக்க வேண்டியது அவசியமானது என ஹர்ஸ டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## யானை தாக்கி கணவன் பலி; மனைவி படுகாயம்!

புல்மோட்டை மயிலங்குளம் பிரதேசத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற கணவனும் மனைவியும் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் பதவிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் கணவன் உயிரிழந்துள்ளார்.

ஆபத்தான நிலையில் இருந்த பெண் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மஹாசோன்புர பிரதேசத்தை சேர்ந்த 48 வயதான சிவில் பாதுகாப்பு படை வீரரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. (இ)

# வாரம் ஒரு தகவல்

## விஷப் பரீட்சை

" சேர்....உங்களுக்கு என்ன ஆச்சு? "

"என்ன சொல்றீங்க?"

"கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க.... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பீட்டீங்க... சரி; சாப்பிட்டு வெற்றிலை பாக்கு போட்டீங்க... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விடயம்?"

"ஹி அதுவா? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம்! கொட்டினால் வலி தாங்க முடியாது. அங்கே பந்தல் முகப்பில் நின்று கொண்டிருந்தபோது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராகப் பறந்ததைப் பார்த்துவிட்டேன். அதுதான் பறந்து வந்துவிட்டேன்."

தேனீ கொட்டினால் வாதநோய்க்கு நல்லது சேர்"

"அப்படித்தான் சொல்வது வழக்கம். அது உண்மையா?"

"லண்டன் விஞ்ஞானிகள் தேனீ விஷத்திலிருந்து Peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே"

"அப்படியா? "

"ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந்துகளைக் கொடுப்பது வழக்கம். அதை யெல்லாம் விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப்பிட்டு கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச்சல் கிடையாது சேர்"

"இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர். அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள்.

"சரி... நான் தான் அப்படி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்படி ஓடிவரவேண்டும்?"

நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியாற்று விவசாயிகளுக்கு விதைநெல்

## வடமாகாண விவசாய அமைச்சர் வழங்கி வைத்தார்




(மன்னார்)

மன்னார் பாலியாற்று விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல்லை வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வழங்கி வைத்தார்.

வடக்கு மாகாண சபையின் ஒரு வருட நிறைவையொட்டி நேற்று முன்தினம் வெள்ளாங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.




இது தொடர்பாக மேலும் அறிய வருவதாவது,

மன்னார்மாவட்டத்தில் ஏறத்தாழ 20 ஆயிரம் ஹெக்டயர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும் இந்த வருடம் நிலவிய கடும் வரட்சி காரணமாக நெல் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தில் விதை நெல்லுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனைக்கருத்திற்கொண்டு மானாவாரிச் செய்கையாக புழுதிவிதைப்பைமேற்கொண்டு வரும் பாலியாற்று விவசாயிகளுக்கு வடமாகாண சபையின் ஓராண்டு நிறைவையொட்டி வடமாகாண விவசாய அமைச்சின் நன்கொடை நிதியிலிருந்து 3.5 இலட்சம் ரூபா பெறுமதியில் 250 புசல் ÏA ரக விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளது.

விதைநெல் வழங்கி வைக்கப்பட்டதன் பின்னர் பாலியாற்றின் உழுது பண்படுத்தப்பட்ட வயல் நிலத்தில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாய பூர்வமாக புழுதி விதைப்பையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில்வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹால்தீன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், விவசாயப் போதனாசிரியர் ஜெ.தே. மிராண்டா, பாடவிதான உத்தியோகத்தர் பிராங்போட் உதயச் சந்திரன், பாலியாறு விவசாய அமைப்பின் தலைவர் சி.திருஞானமூர்த்தி ஆகியோரும் பாலியாற்று விவசாயக் குடும்பங் களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். (2)

# ஜனநாயக போராட்டங்களை அடக்க முற்பட்டால் எதிர்காலத்தில் ஆபத்தான விளைவுகள் ஏற்படும்

## எச்சரிக்கின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி

(குருமன்காடு)

சாத்வீக போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க முற்பட்டதால்தான் ஆயுதப்போராட்டம் வெடித்தது. யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்திருக்கும் நிலையில் மீண்டும் ஓர் ஆபத்தான சூழலை அரசாங்கம் ஏற்படுத்தி வருகிறது. இதனை உடன் நிறுத்த வேண்டும். இல்லையெனில் இதற்காக எதிர்காலத்தில் அரசாங்கம் பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கும்" என எச்சரித்திருக்கிறார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த பிரஜைகள் குழுவின் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என அச்சுறுத்தல் பலருக்கு விடுக்கப்பட்டுள்ளது. இதனையும்தாண்டிஇங்குவருகை தந்தவர்கள் கைது செய்யப் பட்டவர்களின் விடுதலைக்காக குரல்கொடுத்துள்ளார்கள்.

ஜனநாயக ரீதியாக இடம் பெறுகின்ற இந்தப் போராட்டங்களைக் கூட இந்த அரசாங்கம் துப்பாக்கிமுனை கொண்டு மாத்திரம் அடக்கவில்லை. இரும்புக்கரம் கொண்டு மிகவும் மோசமாக தாக்கவும் செய்கிறது. எங்களுடைய ஆரம்பகால தலைவர்களின் சாத்வீக போராட்டங்களை அரசாங்கம் அடக்க முற்பட்டதன் விளைவாகத்தான் கடந்த முப்பது வருட காலம் இந்த நாட்டில் பெரும் யுத்தம் ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. அந்த யுத்தத்துக்குப் பிற்பாடு, ஐந்து வருடங்கள் கடந்தும் கூட இந்த அரசாங்கம் ஜனநாயகப் போராட்டங்களை குழப்பி வருகிறது .அடக்க முற்படுகிறது. இது ஒரு ஆபத்தான விளைவைத்தான் எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் சிறையில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கி, அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் சேர்ந்து இயல்பான வாழ்க்கையை வாழ விடுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். இதேபோன்று சட்டவிரோதமாக செயற்பட்டு தாக்குதல் களை நடத்துபவர்களை சட்டத்தின்முன்நிறுத்தவேண்டும்.

எதிர்காலத்தில் தமிழ் மகள் தமது உரிமைக்காக ஜனநாயக ரீதியாக போராடும் போது அதனை இரும்புக்கரம் கொண்டு தடுப்பது நிறுத்தப் படவேண்டும். இல்லையென்றால் எதிர்காலத்தில் இதற்காக அரசாங்கம் பெரும விலை ஒன்றைக் கொடுக்க வேண்டி ஏற்படும் என்றார். (2-250)

## சமிக்ஞை விளக்குகள் எப்போதுதான் ஒளிரும் மக்கள் கேள்வி

கிளிநொச்சி ஏ-9 வீதியில் உள்ள கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக கணேசபுரத்தை நோக்கி செல்லும் புகையிரதக் கடவையில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்ட நிலையில் அவை ஒளிராமல் செயலிழந்து காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் குறித்த புகையிரதக் கடவை அமைந்துள்ள வீதியை பயன்படுத்துவோர் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகையையொட்டி நேற்றைய தினம் இந்தப் புகையிரதக் கடவைக்கு பாதுகாப்பு கடவை பொருத்தும்பணிநடைபெற்றது.

ஆனால் சமிக்ஞை விளக்குகள் ஒளிர்வதாக தென்படவில்லை.என அவதானித்தவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஜனாதிபதியின் வருகையையடுத்து இந்தப் புகையிரதக் கடவையில் அமைந்துள்ளசமிக்ஞைவிளக்குகள் ஒளிபெறுமா என அப்பகுதி மக்களால் கேள்வி எழுப்பப்படுகிறது. (2-254)





உலக அஞ்சல் தின நிகழ்வு ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகத்தில் அண்மையில் அஞ்சல் அதிபர் நவரட்ணம் மகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற போது...

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

## புத்தகக் கண்காட்சி

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வவுனியா நகரசபை பொது நூலகம் கேசவன் புத்தக நிறுவனத்துடன் இணைந்து வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் தமிழ் புத்தகக் கண்காட்சி மற்றும் மலிவு விற்பனையை ஏற்பாடு செய்துள்ளனர்.

"வாசிப்பை நேசிக்க வைப்போம்" எனும் தொனிப் பொருளில் நடைபெறும் இக்கண்காட்சி இன்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இதில் இந்தியாவில் உள்ள பல முன்னணி பதிப்பகங்களின் புத்தகங்கள் நேரடியாக கொண்டுவரப்பட்டு காட்சிப்படுத்தி இந்திய விலையின் 1.5 முதல் 3.15 மடங்கு வரையான விலைகளில் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் சிறுகதை, நாவல், கட்டுரை, திறனாய்வு, ஆன்மீகம், சோதிடம், சிறுவர் நூல்கள் எனப் பல்வேறு வகையான பிரிவுகளில் நூல்கள் இடம் பெறுகின்றன.

வவுனியா பிரதேச புத்தக ஆர்வலர்களின் தேடல்களிற்கும்,மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை தூண்டுவதற்கும் இக்கண்காட்சி வழி ஏற்படுத்துமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (2)

## மாணவர்களுக்கான போட்டிகள்

(கிளிநொச்சி-1)

கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, பொது அறிவுப்போட்டி என்பனவும் ஏனையோருக்கு சிறுகதை போட்டியும் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் " நல்ல நூல்களை நாளும் கற்போம், ஒழுகுவோம்" எனும் தொனிப்பொருளில் கொடிவாரமும் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி பொது நூலகம் வன்னியுத்தம் காரணமாக முழுமையாக அழிவடைந்த நிலையில் கட்டட வசதிகள் இல்லாத போதிலும் தேசிய வாசிப்பு மாதத்தில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் இந்த நூலகம் மீளவும் வளர்ச்சிபெற புலம்பெயர் லண்டன் வாழ் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பினரால் 25 ஆயிரம் நூல் சேகரிக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நூல்கள் சேகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-277)

# 261 பயனாளிகளுக்கு காணி உறுதிப்பத்திரம்

(கண்டாவளை)

கண்டாவளைபிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 261 பயனாளிகளுக்கு இன்றையதினம் காணிஉறுதிப்பத்திரங்கள்வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வீல் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலக காணிப் பகுதியினரால் குறித்த வீடுகள் அமைந்துள்ள காணிகள் அளக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட வுள்ளன.

இதுவரை காலமும் காணி உறுதிப் பத்திரம் இன்மையால் அரசாங்கத்தினால் வழங்கப் பட்ட வீட்டுத் திட்டமும் ஏனைய உதவிகளும் இவர்களுக்கு கிடைக்கவில்லை.

தற்போது வழங்கப்படும் காணி உறுதிப் பத்திரங்களினால் இம் மக்கள் நன்மையடையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-263)

# கட்டாக்காலி கால்நடைகளால் வயல்நிலங்கள் நாசமாக்கப்பட்டால் குற்றப்பணம் அறவிடப்படும்

## கிளி.கமநலசேவை நிலையம் எச்சரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பிரதேசங்களில் காலபோகநெற்செய்கை ஆரம்பமாகியுள்ளதால் நேற்று முன்தினம் தொடக்கம் கட்டாக் காலி கால்நடைகளை வீடுகளில் கட்டி வளர்க்குமாறு கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வறிவித்தலைமீறி கால்நடைகள் வயல்நிலங்களை நாசப்படுத்தினால் அவைகள் பிடிக்கப்பட்டு பிடி பணம் 500 ரூபாவும் குற்றப்பணமாக 500 ரூபாவும் அறவிடப்படும்.

அத்துடன் குறித்த கால்நடைகளை ஐந்து நாட்களுக்குள் உரிமையாளர்கள் எடுத்து செல்லாவிடின் அவை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## விதி ஆடும் விவசாயிகள் வாழ்வு

நாட்டின் பஞ்சம் தீர்த்திடவே
நாவூறும் கஞ்சி குடித்து
நாள்தோறும் வெயில் காய்ந்து
நலிந்து போகுமே விவசாயி உடல்
வேளாண்மை செழிக்க
பலபாடுபட்டு பசியை மறந்து
பசுமை காத்திடும்
செயற்கை விரும்பா
இயற்கை வித்தகர்
செய்யும் தொழிலை
தெய்வமாய் நினைந்து
பெய்யும் மழையிலே
வயலோடு நனைந்து
வாடும் பயிர்கண்டு
வைத்தியனாகி
தேடிடும் உலகிலே
தேசவளம் காப்பார்
தேகம் உருகிடும்
வியர்வையில் கலந்து
பலபோகம் நடத்தவே
பலகடன் சுமந்து
பார்முழுவதும் ஏரினால் உழுதிடும்
ஏழ்மை விவசாயிகள்
ஏக்கங்கள் தொடருமா?

எஸ்.ஆர்.ராம்கி
கிளி/ இந்துக்கல்லூரி

## ஆசான்களே வாழ்க

வெள்ளை உடை உடுத்து
கொள்ளை இன்பத்துடன்
புள்ளிமான் போல்...
துள்ளி வந்த எம்மை
தூக்கி அணைத்த- நம்
ஆசான்களே வாழ்க என்றும்
பல சிந்தனைகளோடு
பட்டாம்பூச்சிகளாய்
பறந்து வந்த எம்மை
பாரிற்கு அறிமுகம் செய்த
ஆசான்களே வாழ்க என்றும்
சாதி மத பேதமின்றி
சகலதையும் சமமாக மதித்து- எம்மை
சமத்துவமாய் வாழவைத்த
ஆசான்களே வாழ்க என்றும்
கசப்பாக கருதிய
எண்ணையும் தமிழையும்
கரும்பாக உண்ண வைத்த
ஆசான்களே வாழ்க என்றும்
கல்வி என்னும் அமிர்தத்தை
அயராது பாடுபட்டு
அள்ளியள்ளித் தந்த- நம்
ஆசான்களே வாழ்க என்றும்

பா.மதனபாரதி
அல்வாய்

## ஆசிரியர் தினம்

ஆசிரியர் தினமாம் நம்மை
வாழவைக்கும் ஆசான்கள் தினமாம்
கல்வியெனும் பெருங்கடலில்
நாம் முத்துச்சேர்க்க
எமக்காக முத்துக்குளித்து
எமை வாழ்வில் முன்னேற்ற
பாடுபடும் ஆசான்களே!
கானல் எனும் கண்ணாடியில்
எம் முகத்தைப் பார்க்க வைத்து
கல்வியை தேனமுது போலவே
ஊட்டிவிடும் ஆசான்களே
நாம் அகரம் தொட்டு
சிகரம் ஏற ஏணியாய்
ஏற்றிவைத்து நமக்காக
பாடுபடும் ஆசான்களே!
வாழ்க நீர் எந்நாளும்
வளர்க உம் புகழ்
தொடரட்டும் உம்பணி

கி.தனுசன்
கிளி/ விவேகானந்தா வித்தி.

## இமயம் தொட...

கொடுமை கண்டு
கொதித்தெழவும்
அன்பு கண்டு
அமைதியாகவும்
இருவரை
உன்னுள் வாழவிடு
இனிமை வாழ்வுதனை
உனதாக்கு
தனிமை என்ற வார்த்தைகூட
தவிடு பொடியாக்கிவிடும்

மாவை. நா.கஜேந்திரன்

## செதுக்க கற்றுக் கொள்ளுங்கள்

ஆங்காங்கே அவதாரமெடுக்கும்
காமவேள்வி பலிக்கடாயாய்
பெண்கள்
புரட்டப்பட்ட பக்கங்களில்
பள்ளி சென்ற மாணவி
படிப்பிக்க சென்ற ஆசிரியை
கேள்விக்குறியுடன் நகருகிறது
கேள்விக்குறிக்குள் ஏழுவகை
பெண்களும்
பாதகனின் பொழுதுகளில்
கண்களை மூடுகிறான்
வரிசையில் நாளை யார்?
கசக்கி எறியப்பட்ட பூக்களுக்கு
பாரதி மீண்டும் பிறக்க வாய்ப்பில்லையாம்
மரணித்துப்போன மனங்களில் மாற்றம்
எதிர்பார்க்க முடியாததொன்று தான்
நீங்களே உங்களை செதுக்க
கற்றுக்கொள்ளுங்கள்

தாரணி
இருபாலை



## உன் கருவறையே என் வாசம்

ஊன் பிழிந்து –உன்
உதிரத்தை என் உணவாக்கி
வான் பிளந்த மழை குளித்து
எனை வானளவில் உயர்த்த எண்ணி
தெய்வமெல்லாம் கையெடுத்தாய்
என்னை எண்ணி உணவிழந்தாய்
உன்னை நீயே தேய்த்துக்கொண்டாய்
வளைந்து போனாய்
என்னை மிதத்தும் தெப்பமானாயே அம்மா!

பருத்தியூர்
வி.கோபிதாஸ்

## ஏக்கம்

துள்ளித்திரியும் வயதிலே
யுத்தம் என்ற புயல்காற்று
எம்நாட்டில் வீசியதால்
கல்வி என்ற பெருங்கடலை
கடக்க முடியாமல்
தவிக்கும் சிறுவர்கள் நாம்

இடைக்காடு
க.செல்வமலர்

## கருணை உள்ளம்

பேரிடரிலும் குழந்தையைக் காக்க
உயிரையும் கொடுப்பாள் தாய்
மழையில்தான் நனைந்தாலும்
குழந்தையை நனையவிடாது
குடையைக் கொடுத்து
அழைத்துச் செல்கிறாள்
தன்னலம் பாராத்தாய்
இத்தகு கருணையுள்ளம்
தாய்க்கன்றி வேறு
யாருக்குவரும்

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல்- 224

## மழலையை நினைந்து

கல்வியைக்
கண்ணெனப்போற்றி
தன் கண்மணியை
இமைபோல் காத்து
அணைத்து அழைத்துச்
செல்கின்றாள்
மழையிலும் மழலை
அன்பிலும் நனைந்து

சி.கருணாகரன்
அரியாலை

## தடை தாண்டல்

ஏடெடுத்து கல்வி கற்க
இந்த மண்ணில்
எத்தனை தடைகள்
தரப்படுத்தல்
தரம் கெட்ட மனிதரின்
சிறுவர் துஷ்பிரயோகம்
அம்பலமாகும் வேலியே
பயிரைக் கொறிக்கும்
சம்பவங்கள்
காய்ந்த வயிற்றில்
கட்டிய நெருப்போடு
கலங்கும் பெற்றவர்கள்

அராலியூர்
சோ:சிவகுமாரன்

## உன் நிழல் போதுமே!

அப்பனில்லை உறவுகளில்லை
அணைத்திட எவருமில்லை
அம்மா நீ இருக்கையில் நான்
என்றும் அநாதையில்லை
அடைமழைதான் பெய்யட்டுமே
அனுப்பிவைப்பேனே
பாடசாலை படித்துப் பட்டம் பெற்றால்
இடி என்ன செய்யும்
கொடும் மழைதான் என் செய்யும்
குடை தேவையில்லையே
உன் நிழல் இருக்கையிலே!

பொ.புனிதன்
வரியப்புலம்

## தாய் அன்பு

கருவறையில் பொக்கிஷமாய்
பாவித்த உன் மகனை
மழையும் தொட்டுவிடாமல்
குடையெனும் ஆயுதத்தால் காத்தாய்
உன் நிலையை பொருட்படுத்தாமல்
இந்த மண்ணில் எனக்காக
வந்த மண்ணுலக தெய்வமே
உன் நிகரற்ற அன்பில்
அடைமழையும் தோற்றுவிடும்

வி.சுகன்யா, கோப்பாய்

## தாய்ப்பாசம்

மழையில் நனையாமல் வெயிலில் காயாமல்
காப்பாற்றி வளர்த்த தாய்ப்பாசத்தை
பிற்காலத்தில் பிள்ளைகள் பலர்
நினைத்துப் பார்ப்பதில்லை

க.நாகராசா, நுணாவில்

## தாயின் பெருமை

உனை நனைத்து
எனைவளர்த்தாய்
அதற்காய் எனை உருக்கி
உனக்காய் ஒளியாய் இருப்பேன்
அன்பின் வண்ணமே என்
வாழ்வின் முழுநிலவே
அன்பின் காவியமே
பாசத்தின் அரவணைப்பே
என் வாழ்வே உன்னாலானதே

ம.டினோஜா
கந்தரோடை

## தாய்

பத்துமாதம் சுமந்து பெற்றாள்
பாசத்தோடு பாலூட்டி வளர்த்தாள்
பள்ளிக்கு கொண்டு சென்று
பலகலையும் கற்றுக்கொடுத்தாள்
பாலன் இவன் பாரினிலே
பலகாலம் வாழ்வதற்காய்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

# மௌனத்தின் தேடல் –225



அன்பு வாசகர்களே !


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15 .10.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் நவராத்திரி விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறுவர்களின் நடனம், பேச்சு, கவிதை என்பன இடம்பெற்றதுடன் இசையமைப்பாளர் ஸ்ரீகுகனின் சப்தஸ்வரம் இசைக்கல்லூரி மாணவர்களின் கீ போர்ட் இசை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (படங்கள்:–உ.சாளின்)





## நிகழ்வின் நிழல்கள்

யாழ்.திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தின் வாணி விழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது மேற்படி காப்பகத்தின் பணிப்பாளர் எஸ்.தனபாலன் சிறுமி ஒருவருக்கு ஏடு தொடக்கி வைப்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற மாணவிகளது கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:– புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)





சைவசித்தாந்த வித்தகர், பண்டிதர் அமரர் சிவலிங்கத்தின் கந்தபுராண சுருக்கம் எனும் நூலின் அறிமுக விழா அண்மையில் இளைப்பாறிய அதிபர் பொ.சிவஞானம் தலைமையில் ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்றபோது... (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)



ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கிளிநொச்சி கிளையின் வாடிக்கையாளர் ஞானதாசன் என்பவருடைய மரணத்திற்கான கொடுப்பனவான ரூபா 519460 காசோலை அவரது மனைவி திருமதி ஞானதாசனிடம் கிளையின் விற்பனை முகாமையாளர் அ.ரஞ்சித் வழங்குவதையும் அருகில் நிர்வாக உத்தியோகத்தர் கை.சதீஸ் மற்றும் குழு நிதியியல் ஆலோசகர் ப.ரமேஸ் நிற்பதையும் படத்தில் காணலாம்.




யாழ்.சண்டிலிப்பாய் உப தபாலகத்தில் உலக அஞ்சல் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அஞ்சல் வியாபார மேம்படுத்தல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.





வவுனியா உக்கிளாங்குளத்தில் அமைந்துள்ள கனறா முன்பள்ளியில் சிறுவர் தின நிகழ்வு இம்முன்பள்ளி அதிபர் அருட்சகோதரி கத்தரின் செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றதைப் படங்களில் காணலாம். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



### கடவுள் உங்கள் முன் தோன்றினால் என்ன வரம் கேட்பீர்கள்?

வியா ஐயா!

ஜசிதரன், புத்தூர்.

**ஜெயலலிதாவிற்கு தீர்ப்பு வழங்கியது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இந்தியா ஜனநாயக நாடென்பதை நிரூபித்து விட்டது. ஈழத் தமிழர் நலனுக்காக குரல் கொடுத்தவரின் நிலைகண்டு பலர் ஆறுதல் அடைகின்றனர்.

தொண்டையில் சிக்கிக் கிடந்த முள் விலகிய நிம்மதியில் தொண்டையைத் தடவி பெருமூச்சு விடுகின்றனர் பலர்.

அன்பின் வியாசரே!

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

**மனிதர்கள் இறந்த பின்பு அவர்களுக்கு சொர்க்கம் அல்லது நரகம் கிடைக்கும் என்கிறார்களே... அந்தச் சொர்க்கமும் நகரமே எப்படியிருக்கும்?**

சொர்க்கத்தில் இருப்பவரின் மனநிலை பிச்சை எடுத்து பிழைக்கும் ஒருவனின் மனநிலை. எதற்கும் கலங்கத் தேவையில்லை, எதையும் இழக்கத் தேவையும் இல்லை.

நரகத்தில் இருப்பவர் கோடான கோடி செல்வந்தர் போல் தன் சொத்துக்களை பிறர் கவர்ந்திடுவாரோ என அல்லும் பகலும் அதன் நினைவிலேயே நிம்மதி நித்திரை இழந்து தவிப்பார். நாம் சொர்க்கம் என நினைப்பது அங்கு நரகம். நாம் நரகம் என நினைப்பது அங்கே சொர்க்கம். அவ்வளவுதான்.

Hi வியா!

த.மோகனரூபன்

**இதிகாசங்கள் கூறும் கதைகளில் கெட்டவர்களாக வரும் இராவணன், துரியோதனன் ஆகிய இருவரில் யார் உத்தமன்?**

சபையில் பாஞ்சாலியின் துகிலை உரிய உத்தரவிட்டு விட்டு பார்த்து ரசித்தவன் துரியோதனன். சீதையிடம் உன் அனுமதியில்லாமல் உன்னை தொடமாட்டேன் என்று கூறியவன் சிவபக்தன் இராவணன். முடிபு உங்கள் கையில்.

அன்பின் வியாசரே!

அகிலேஸ்வரன், மருதங்கேணி

**அதிக அன்பு கொண்டவர்கள் கறுப்பர்களா? சிவப்பர்களா?**

சமீபத்தில் இணையத்தில் ஒரு காணொலி பார்த்தேன். ஒரு புலி குரங்கை வேட்டையாடுகிறது. அதை உண்ணத் தொடங்கும் போது குரங்கின் வயிற்றில் அதன் குட்டி இறுகப் பற்றிக் கொண்டிருந்தது. குட்டியை தன் வாயால் கௌவிக் கொண்டு சென்ற புலி அதனுடன் அன்பாய் அரவணைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

தொலைபேசி எப்போது வந்ததோ அப்போதே மனிதனின் மனித நேயம் அழிந்து விட்டது. கொடுமை கண்டு கொதித்தெழுந்தவன் இன்று கொடுமை நடக்கும் போது அதை வீடியோ பிடிக்கிறான் இதுதான் நிலை.

அன்பின் வியாசரே!

மோகன், காரைநகர்

**"பேய் அறைந்தவன் போல்" என்பதற்கு ஒரு உதாரணம் கூறுங்களேன்?**

கெல்மட் போடாமல் சென்று பொலிசைக் கண்டவள் போல்!

### ஜெயலலிதாவிற்கு தீர்ப்பு வழங்கியது பற்றி உங்கள் கருத்து என்ன?

அன்பின் வியாசரே!

காவியா, சுண்டுக்குளி

**உங்களுக்கு சினிமாவில் கதாநாயகனாக நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தால்?**

அந்தப் படத்தில் நடிக்கப் போகும் கதாநாயகி கொடுத்து வைத்தவர். விக், கட்டுப்பல்லு என தயாரிப்பாளருக்கு கொஞ்சம் செலவு கூடுதலாக இருக்கும்.

அன்பின் வியாசர் அவர்களே!

சி.மாணிக்கசோதி, கோண்டாவில்

**கடவுள் உங்கள் முன் தோன்றினால் என்ன வரம் கேட்பீர்கள்?**

ஒவ்வொரு நாளும் ஜனாதிபதியை வடக்கிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றுதான் கேட்பேன். அப்போது தானே அவர் செல்லும் இடங்களில் இருக்கும் கட்டடங்கள் வர்ணங்க ளால் மிளிரும், பள்ளங்கள் கிரவல் மண்ணால் நிறையும் ரயில் கடவைகள் அவசர அவசரமாய் நிலக்கற்கள் பதியும்.

அன்பின் வியாசர் அவர்களே!

கிருஷா, வரணி

**உங்கள் அறுபதாவது ஆண்டு விழாவிற்கு பரிசு தரனும். உங்களுக்கு வோசிங் மிசின் வாங்கித் தரவா?**

வேண்டாம் அம்மா! என் பொண்டாட்டியின் புடைவையை என் கையால் துவைத்து கஞ்சி போட்டு அயன் பண்ணி வைப்பதில் எனக்கு ஆத்ம திருப்தி. (நிச்சய தார்த்தம் அன்று இதுவும் நிச்சயிக்கப்பட்டு விட்டது)

# இலங்கையின் சர்வதேச ஒப்பந்த மீறல்களும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையும்

**இலங்கையின் சர்வதேச ஒப்பந்த மீறல்களும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையும் எனும் தலைப்பில் சண்டே லீடரில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.**

ஐ.நா.ம.உ.ச யில் சமர்ப்பிக்கப்பட்ட 40 பக்கங்கள் கொண்ட சுருக்கமான அறிக்கையொன்று, குற்றச்சாட்டுக்களிலிருந்து விலக்குப்பெற்று தப்பிக்கொள்வதற்கு முயற்சிக்கும் இலங்கையின் பிடிவாதமான போக்குகள் உட்பட இலங்கையின் உள்ளார்ந்த நடவடிக்கைகள் மடல் சபையின் அக்கறையினை தட்டியெழுப்புவதாயிருந்தது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டில் இலங்கை நடைமுறைப்படுத்திவரும் விடயங்கள் பற்றிய அதனது 5ஆவது பருவகால அறிக்கை மீதான மீள்பரிசீலனை சம்பந்தமான தனது 40 பக்கங்கள் கொண்ட சுருக்கவிளக்க அறிக்கையொன்றினை சர்வதேச மன்னிப்புச் சபை ஐ.நா.ம.உ.ச யில் இவ்வாரம் சமர்ப்பித்திருந்தது.

உரிமை மீறல்பிரச்சினைகள் பற்றிய சபையின் பட்டியலில், 2014 மார்ச்சிலிருந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலகட்டத்தின்போது விரிவான முறையில் ஆவணப்படுத்தப்பட்ட குறிப்பான சில விடயங்கள் மட்டில் மனித உரிமைகளுக்கான அக்கறைக்கு உரிய பிரச்சினைகளை அவ்வறிக்கை வலியுறுத்திக் காட்டுவதாயிருந்தது. குறிப்பாக, மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் ஊடாக தப்பிப்பிழைத்து வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்தோர் மற்றும் அவர்களது குடும்பங்கள் போன்றவற்றுடனான நேர்முகங் காணல்கள் மற்றும் இலங்கையிலுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுடனான தொடர்புகள் மூலம் 2012 - 2014 காலகட்டத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களையும் கொண்டதாகவே அவ்வறிக்கை இருந்தது.

சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கையின் பிற்குறிப்பு ஒன்றின்படி, இலங்கை அரசின் நெருக்கடிகள் அழுத்தங்கள் மத்தியிலிருக்கும் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் சர்வதேச அமைப்புக்களை தொடர்பு கொள்வதன் மூலம் பழிவாங்கலுக்குள்ளாகும் ஆபத்திற்கு முகம் கொடுக்கும் நிலைமைகளுடன் மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களுடன் அரசுக்கு இருக்கும் பகைமையுணர்வு காரணமாகவும் பாதிக்கப்பட்டவர்களை இவர்கள் அணுகுவது மிகவும் கடினமான முயற்சியாகவே இருக்கிற தென்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

அகதி அந்தஸ்து கிடைக்காமல் நாடு திரும்பியவர்களுக்கெதிரான பழிவாங்கல்கள் பற்றிய ஆதார ஆவணங்களுடன் கூடிய சம்பவங்களிற் போலவே இலங்கையிலே தொடர்ந்துமிருக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பழிவாங்கல் ஆபத்தை எதிர்கொள்ளக் கூடுமென்பதால் தம்மிடம் ஏற்கனவே இருக்கும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாதிக்கப்பட்டவர்கள் அல்லது கட்சிகளின் தற்போதைய முகவரி, இடம், திகதி மற்றும் அவர்களை தொடர்பு கொள்ளக் கூடிய வசதி வாய்ப்பு, வழிமுறைகள் போன்ற தேடல் முயற்சிகளில் தாம் பின் வாங்கவேண்டிய நிலைமைகளும் இருப்பதாக சர்வதேச மன்னிப்பச் சபை கூறுகிறது.

இலங்கை அரசு படைகளுக்கும் விடுதலைப்புலியினருக்குமிடையில் யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், வெகுவிரைவிலேயே அரசின் 4ஆவது பருவகால அறிக்கை 2002இல் ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2003இல் அது சபையின் அவதானத்துடன் கூடிய கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தற் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 2007 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கையானது போதியளவு தாமதத்திற்குப் பின்னர் இறுதியாக 2012 ஒக்டோபரில் சமர்ப்பிக்கப்பட்டது. இது 2003 - 2012ஆம் ஆண்டுகளுக்கான ஒன்பது வருட விடயங்களை உள்ளடக்கிய ஒன்றாகும். நீண்ட இந்த காலகட்ட மானது ஐந்து வருட போர் நிறுத்தத்திலிருந்து அதி தீவிரமான ஆயுத மோதலுக்கூடாக போரின் முடிவுடன் மனிதவுரிமைகள் மட்டில் மிகமோசமான மீறல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் பாரிய அளவிலும் இயல்பு மாற்றங்களுடன் இடம் பெற்று வரும் இலங்கைக்கான ஒரு மாறுதலுக்குரிய கால கட்டத்தை கொண்டதாகவே இருப்பதாக சர்வ தேச மன்னிப்புச்சபை குறிப்பான முறையில் தெளிவுபடுத்துகிறது.

கட்டடங்கட்டமான இந்த நீண்ட கால மாறுதல்களூடாக கடந்துவந்த நிலையிலும், இந்த சபையினுள் 2003ஆம் ஆண்டில் ஆழமான அக்கறைக்குரிய விடயங்களாக அறிவுறுத்தப்பட்ட விடயங்கள் பல 11 வருடங்களின் பின்னருங்கூட தொடர்ந்துகொண்டிருப்பது இலங்கை விடயத்தில் குழப்பகரமான ஒன்றாகவே இருக்கிறது. அதாவது, இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டம் (Prevention of Terrorism Act 'PTA') மீதான இலங்கையின் மாறாத நம் பிக்கையுடன் சர்வதேச ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரத்துக்களின்படி ஒத்துழைக்க முடியாமை போன்றவையும் இதில் அட ங்கும். எடுத்துக்காட்டாக, சித்திர வதைகள், காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் பிரச்சினை மற்றும் பேச்சு சுதந்திரம், மக்கள் இன்று கூடும் சுதந்திரம் போன்ற வற்றுக்கான உரிமை மறுப்பு போன்றவை தொடர்கதையாகவே இருப்பது போன்ற மேலும் பல விடயங்கள் மட்டில் சர்வதேச மன் னிப்புச்சபை தனது ஆழமான அக் கறைகளே சபை அமர்வுகளில் தொடர்ந்தும் வெளிப்படுத்தியே வருகிறது.

✦ குற்றச்செயல்கள் - குற்றச்சாட்டுக்களிலிருந்து இயல்பானதொரு விலக்குப்பெற்றிருப்பது போன்ற பிடிவாதமான ஓர் போக்கினை இலங்கை தொடர்ந்தும் கொண்டி ருப்பது. (Srilanka's Persistant Climate of impunity)

✦ மனித உரிமைகள் மதித்து பாதுகாத்து நீதியினை வழங்கு வதற்கு இலங்கை கைக்கொண்டிருக்கும் பலவீனமானபொறிமுறை.

✦ சிறுபான்மை மக்கள் மீதான தொடர் வன்செயல்கள் மற்றும் அவர்கள் மீது சுமத்தப்படும் பாகுபாடுகள் போன்றவற்றிலிருந்து அவர்களை இலங்கை பாதுகாக்கத் தவறியமை.

✦ பாலியல் வன்செயல், முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக் கெதிரான நீதிமற்றும் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு புறம்பான பட்ட மரணதண்டனை நிறைவேற்றங்கள், புலிகளுடன் தொடர்புடையவர்களாக சந்தேகிக்கப்படும் மக்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், குடும்ப உறுப்பினர்கள் போன்றவர்களுடன் காணாமற்போன தமது உறவினர்கள் பற்றி தகவல்களைப் பெறுவதற்கு அதிகாரிகளை அணுகிய காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டதாக கூறப்படும் தனி நபர்கள் போன்றோர் மீது அதிகரித்துவரும் பாரதூரமான சித்திர வதைகள் போன்ற மேலும் பல சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளும் இவற்றில் அடங்கும்.

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை வீழ்த்தி தொடரை வென்றது ஆஸி



பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் அவுஸ்திரேலியா வென்று தொடரை கைப்பற்றியது.

முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி 49.3 ஓவரில் 215 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. தொடக்க வீரர்களான சர்பிராஸ் அகமது 65 ஓட்டங்கள், அகமது ஷேசாத் 61 ஓட்டங்கள் எடுத்தனர். ஜான்சன் 3 விக்கெட் கைப்பற்றினார்.

பின்னர் விளையாடிய அவுஸ்திரேலியா 40 பந்து எஞ்சி இருந்த நிலையில் 5 விக்கெட் இழப்புக்கு 217 ஓட்டமும் எடுத்து 5 விக்கெட்டில் எளிதில் வெற்றி பெற்றது. மேக்ஸ்வெல் அபாரமாக விளையாடி 76 ஓட்டங்களும் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா 3 போட்டி கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி உள்ளது. சார்ஜாவில் நடந்த முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணி 93 ஓட்டங்களில் வெற்றி பெற்று இருந்தது.



இரு அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி அபுதாபியில் இன்று நடைபெறவுள்ளது. (க)

## ஆஸி டெஸ்ட் அணியில் ஜேம்ஸ் பல்க்னெர்



அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் இடையே 2 டெஸ்ட் போட்டி டுபாய், அபுதாபியில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி டெஸ்ட் தொடர் தொடங்குகிறது.

டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. அணியில் இடம் பெற்ற மிச்சேல் மார்ஷ் தொடையில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் ஆல் ரவுண்டரான ஜேம்ஸ் பலக்னெர் கூடுதலாக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (க)



இந்திய கணிதவியலாளர் எஸ்.ஆர்.ரங்கநாதனின் பிறந்த தினத்தை முன்னிட்டு மானிப்பாய் பிறைற் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டதுவெற்றி பெற்ற அணியினரையும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம்

## கிரிக்கெட்போட்டி

அஞ்சல் அலுவலகத்தால் நடத்தப்பட்ட 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் வவுனியா பொது வைத்தியசாலை அணி வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்தது.

அஞ்சல் அலுவலகத்தால் நடத்தப்பட்ட 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட 6 பேர் கொண்ட கிரிகெட் சுற்றுப் போட்டியில் 24 அணிகள் பங்கு பற்றி அதில் இறுதியாக 12 அணிகளுடன் மோதி வவுனியா பொது வைத்தியசாலை அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

இப்போட்டியில் ஆட்ட நாயகனாகவும், தொடர் ஆட்ட நாயகனாகவும் வவுனியா பொது வைத்தியசாலையைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றிக்கிண்ணத்தை உத்தியோகபூர்வமாக வைத்தியசாலை பணிப்பாளரிடம் ஒப்படைக்கும் நிகழ்வானது அண்மையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (க-250)

## ஷாங்காய் மாஸ்டர்ஸ் டெனிஸ் அரையிறுதியில் ஜோகோவிச்




ஷாங்காய் மாஸ்டர்ஸ் சர்வதேச டெனிஸ் போட்டி சீனாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் கால் இறுதி ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும், உலகின் முதல் நிலை வீரருமான நோவக் ஜோகோவிச் (செர்பியா) 6-4, 6-2 என்ற நேர்செட்டில் டேவிட் பெரரை (ஸ்பெயின்) தோற்கடித்து அரை இறுதிக்கு முன்னேறினார்.

சீன மண்ணில் ஜோகோவிச் தொடர்ச்சியாக பெற்ற 29ஆவது வெற்றி இதுவாகும். அரை இறுதியில் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை எதிர்கொள்கிறார். இருவரும் இதுவரை 35 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளனர்.

இதில் பெடரர் 18 முறையும், ஜோகோவிச் 17 தடவையும் வெற்றி கண்டுள்ளனர். கடைசியாக விம்பிள்டன் இறுதிப்போட்டியில் ஜோகோவிச், பெடரரை வீழ்த்தி இருந்தார். அதற்கு பெடரர் பதிலடி கொடுப்பாரா? என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

முன்னதாக பெடரர் தன்னை எதிர்த்த ஜூலியன் பென்னட்டுவை (பிரான்ஸ்) 7-6 (7-4), 6-0 என்ற நேர் செட்டில் வெளியேற்றினார். இதன் இரட்டையர் பிரிவின் கால் இறுதி ஆட்டத்தில் ரோகன் போபண்ணா (இந்தியா)-புளோரின் மெர்கா (ருமேனியா) ஜோடி 6-4, 3-6, 10-7 என்ற செட் கணக்கில் இவான் டோடிச் (குரோஷியா)- மார்செலோ மெலோ (பிரேசில்) ஜோடியை தோற்கடித்து அரை இறுதிக்கு முன்னேறியது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்



நீராவிப்பிட்டி முள்ளியவளை அல் ஜின்னா விளையாட்டுக்கழகத்தினரால் ஹஜ் பெருநாளினை முன்னிட்டு நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியனாக வெற்றியீட்டிய முள்ளியவளை வித்தியா அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. வெற்றிக்கிண்ணத்தை அணித்தலைவர் அ.அஞ்சயன் பெறுக்கொள்வதனையும் அத்துடன் ஆட்ட நாயகனுக்கான விருதினை அதே அணியின் வினோசன் பெற்றுக்கொள்வதனையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைபட்டவர்க்கு
– திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நந்திக்கடலில் மறு அறிவித்தல்வரை மீன்பிடித்தொழிலில் ஈடுபடவேண்டாம்

## வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மறு அறிவித்தல் வரை நந்திக்கடலில் மீன்பிடிக்க வேண்டாம் என வட்டுவாகல் கிராமிய கடற்தொழில் மீன்பிடிக் கூட்டு றவுச்சங்கத்தின் தலைவர் வைரையா மாயாண்டி நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளுக்கு அமையவே தமது சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நந்திக்கடலில் இறந்த நிலையில் மீன்கள் கரையொதுங்கியிருந்தன. இவ்வாறு கரையொதுங்கிய மீன்களை எமது சங்கத்திலுள்ள 75இற்கும் மேற்பட்ட மீனவர்களின் உதவியோடு சுத்தம் செய்தோம்.

அதன்பின்னர் தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியிருந்தாலும் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளின் பிரகாரமே நாம் செயற்பட வேண்டியுள்ளது.

மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியமையால் நந்திக்கடல் நீரில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே மழை பெய்தால் இந்நீரில் மாற்றங்கள் ஏற்படும். அதன் பின்னரே மீன்பிடித் தொழிலை முன்னெடுக்க முடியும்.

எனவேதான், சுகாதார அதிகாரிகளின் அறிவித்தல் வந்ததன் பின்னரே வழமை போல மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள மீனவர்களுக்கு அனுமதி வழங்க முடியும் என்று தெரிவித்தார்.(2)

# சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவிப்பு

(குருமன்காடு)

மன்னாரில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் விஷேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட குஞ்சுக்குளம் தொங்குபாலப் பகுதியில் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் 5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிதியொதுக்கீட்டின் கீழ், குஞ்சுக்குளம் தொங்குபால பகுதியில் புதிய தங்கும் விடுதி மற்றும் மக்களின் போக்குவரத்திற்காக புதிய பாலம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இதனையடுத்து, அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா. டெனிஸ்வரன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பகுதிகுச சென்று பார்வையிட்டார்.(2-250)

# அருச்சுனன் புரிந்த தவத்தை நானும் மேற்கொண்ட போது - 3

**நான் :** சுவாமி! தமிழினம் படும் பாடு உங்களுக்குத் தெரியாததல்ல. தமிழ் மக்கள் நம்பிக் கெட்டுப் போனவர்கள். அதிலும் எங்கள் ஏழை மக்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள். மண் மீட்புப் போருக்காக தங்கள் உயிரை தியாகம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் சாமானிய மக்கள்.

இப்போது அவர்களின் குடும்பங்கள் பல்வேறு கஷ்ட துன்பங்களோடு வாழ்கின்றனர். அவர்களுக்கான அச்சுறுத்தல்கள் அவர்களை ஒதுங்கி வாழச் செய்துள்ளது.

மண் மீட்புப் போரில் தியாகம் செய்த குடும்பங்கள் ஒதுங்கியிருக்க, போராட்ட காலங்களில் இந்தப் பக்கம் வராதவர்கள் தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் பாதுகாப்பாக தங்க வைத்தவர்கள் இப்போது தாங்களே தமிழினத்தின் மீட்பர்கள் போலக் காட்டிக் கொள்கின்றனர். இதற்கொரு முடிவே இல்லையா சுவாமி?

**சிவன் :** ஏன் இல்லை, இருக்கிறது மகனே!

**நான் :** என்ன சுவாமி?

**சிவன் :** "ஆமையைப் பிடிப்பவர் மல்லாத்துவர் அதை நாம் சொன்னால் பாவம்" என்ற கதை உனக்கு தெரியாதா என்ன? முன்பெல்லாம் ஒரு காலத்தில் ஆமை பிடிப்பவர்கள் தாம் பிடித்த ஆமையை கடற்கரையில் வைத்துவிட்டு மீளவும் ஆமை பிடிக்கச் செல்வார்கள்.

புலன்களை அடக்கி வைத்திருந்த ஆமை ஆட்கள் இல்லாததை அறிந்ததும் கடலுக்குள் ஓடித் தப்பிவிடும். கடலுக்குச் சென்றவர்கள் கரைக்கு வந்து பார்த்த போது கடற்கரையில் தாம் விட்டிருந்த ஆமைகளை காணாது கவலை கொள்வர்.

இப்படியாக ஆமையைப் பிடிப்பதும் பின்னர் அது ஓடித் தப்புவதுமாக இருக்க, அவர்கள் மீது இரக்கம் கொண்ட நான் ஆமையைப் பிடிப்பார் மல்லாத்துவார் அதை நாம் சொன்ன பாவம் என்று அசரீரியாகக் கூறினோம். அதன்பின்; பிடித்த ஆமையை மல்லாத்தி விட்டனர். அன்றோடு பிரச்சினை முடிந்து விட்டது.

**நான் :** சுவாமி! ஆமையை மல்லாத்தியதோடு அந்தப் பிரச்சினை தீர்ந்து போயிற்று. ஆனால் எங்களுடைய ஆமைகளை என்ன செய்வது?

**சிவன் :** மகனே! தென் பகுதியை ஒரு கணம் உற்று அவதானித்துப் பார். அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்கின்ற திட்டங்களுக்குப் பின்னால் சிங்களப் புத்திஜீவிகளின் திட்டமிடல்களும் ஆலோசனைகளும் உள்ளன.

மகிந்த சிந்தனை, குடியேற்றம்,பௌத்த மதப்பரப்புகை, அபிவிருத்தி என அனைத்து விடயங்களும் சிங்களப் புத்திஜீவிகளின் தயாரிப்புகள்.

ஆனால் தமிழ்ப் புத்திஜீவிகள் ஏதாவது திட்டமிடுகின்றனரா? ஆலோசனை வழங்குகின்றனரா? இல்லவே இல்லை. தமிழ்ப் புத்திஜீவிகள் தாங்கள் தங்கள் நலன்களிலேயே உச்சமாகக் கவனம் செலுத்துகின்றனர். இவர்களிடம் பொது நோக்கு; தங்களுடைய இனம்; தங்கள் இனம் பழிவாங்கப்பட்டு விட்டது என்ற நினைப்பு; தமிழ் அரசியல்வாதிகளை மிகச் சிறந்த முறையில் வழிப்படுத்தவேண்டும்என்றஎண்ணம்எதுவும்கிடையாது.

தமிழ் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளை அழைத்து ஆலோசனை பெறுவதில் இம்மியும் கவனம் செலுத்துவதில்லை. எல்லாம் எங்களுக்குத் தெரியும் என்ற கர்வம்.

இதுதவிர அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் இடம் பிடிப்பதற்கு மாவைக்கு மகாஅபிஷேகம் செய்வதா? சம்பந்தருக்கு மகுடம் தரித்து மாலை அணிவிப்பதா? என்ற சிந்தனையில் மூழ்கி தமிழ் இளைஞர்களின் தியாகத்தையே நிர்மூலமாக்கி விட்டனர்.


இதுவே நிலைமை என்றால், தமிழ் மக்கள் பாவம் என்று சொல்வதைத் தவிர வேறு வழியேதுமில்லை மகனே!

**நான் :** சிவசிவா... சிவசிவா... எனக்கு எந்த வரமும் வேண்டாம். எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள்.

(முற்றும்)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்



நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்கவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன்

# "இறைவனைத் தேடி தெருக்களுக்கு செல்லுங்கள்"

இன்றைய சிந்தனைக்குரிய பைபிள பகுதியாக புனித மத்தேயு எழுதிய நற்செய்தி 22ஆம் அதிகாரம் 1-14ஆம் வசனங்கள் வரை எமக்குத் தரப்படுகிறது. இதில்வரும், "விருந்துக்கு அழைகக்ப்பட்டோர்"பற்றிய உவமைமூலம்இறைவனின் விண்ணரசை எதிர்கொள்வ தற்கு இயேசு இந்த உலகத்திற்கு வழி காட்டுகிறார்.

இதன் மூலக்கருத்தாக 'அழைக்கப்பட்டவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களோ சிலர்" என்ற வாசகத்தைக் குறிப்பிடலாம். இங்கு கடவுளை அரசராகவும், இயேசு தன்னை இளவரசனாகவும் விண்ணரசை திருமண வீடாகவும் ஒப்பிட்டு இந்த உவமையை கூறினார். விண்ணரசிற்கு அதாவது விருந்துக்கு வருமாறு கடவுளின் மக்களுக்கு அதாவது யூதர்களுக்கு இளவரசர் இயேசு மூலம் அழைப்பு விடுக்

## பரமபிதா காட்டிய பாதை

கப்பட்டது. ஆனாலும் அவர்கள் அவ்வழைப்பை புறக்கனிக்கவே கடவுள் அவ்வரசை யூதரல்லாதோருக்கு கொடுத்தார். இருப்பினும் யூதரல்லாதவரும் ஆயத்தமின்றியிருந்தால் அதாவது திருமண ஆடையின்றி திருமணத்தில் பங்கேற்க முடியாது என்பதே நடைமுறை.

இன்றைய நற்செய்தியிலே அரசரது விருந்திற்கான அழைப்பை திருமகன் இயேசு மூலம் ஏற்கெனவே தெரிவித்திருந்தார். இரண்டாவதாக, விருந்து நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டபின், அவர்களை அழைத்துவர, பணியாளர்களை அதாவது இறைதூதர்களை, ஞானிகளை அனுப்புகிறார்.

இந்த உவமையை அனறைய கால கட்டத்தில் இயேசு யூதர்களை மனதில் வைத்தே சொல்லியிருக்க வேண்டும். யூதர்களுக்கு அழைப்பு இருந்தும், அவர்கள் அதை உதாசீனப்படுத்தினார்கள். எனவே, அழைப்பு மற்றவர்களுக்கும் புறவினத்தார்க்கும் செல்கிறது. அழைப்பு வந்துவிட்டது என்பதற்காக தகுதியற்ற நிலையில் நாம் பங்கேற்க முடியாது என்பது நிதர்சனம்.

இயேசு கூறும் இந்த உவமையைக் கொஞ்சம் கூர்ந்து கவனிப்போம் அரசனுடைய மகனுக்குத் திருமணம். எம்மைப் பொறுத்தவரை அந்தத் திருமணத்தில் பங்கேற்பது மிகவும் பெருமை வாய்ந்த ஒரு செயல். ஆனால், அழைக்கப்பெற்றவர்கள் வர விரும்பவில்லை என்று உவமை கூறுகிறது. இருந்தும் மீண்டும் அரசர் தன் பணியாளர்களை அனுப்பி விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். வாருங்கள் என்று அழைக்கிறார். அவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. எனவே அவர் நீங்கள் சாலையோரம் சென்று காணும் எல்லோரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள் என பணியாளர்மூலம் மீண்டும் அழைப்பு விடுகிறார். இறையாட்சியின் பார்வையில் இத்தகைய மனிதர்களாக நம்மில் பலர் இருக்கிறோம் என்பதையே இந்த உவமை வழியாக இயேசு சுட்டிக்காட்டுகிறார்.

இறைவன் தருகிற நிறைவான மகிழ்ச்சி, ஆறுதல், நிறைவு இவற்றை வேறு எவரும் அல்லது எதுவுமோ தரப்போவதில்லை. ஆனால், நாம் இறைவனின் அழைப்பை பொருட்படுத்தாமல் இருக்கிறோம்.

அவர் தரும் விருந்துக்கு வர விரும்பாமல் இருக்கிறோம். காரணம், இந்த உலகம் காட்டும் புற ஈர்ப்புகள். அன்றாட வாழ்வின் கடமைகள், பணிகள் போன்றவற்றை விட தேவையற்ற விடயங்களை கூறலாம். இந்த உவமையில் வரும் மனிதர்களைப் பார்த்து வியக்கும் நாம், இப்போது நம்மைப் பார்த்தே கொஞ்சம் வியப்போம்.



இன்றைய உவமையில் வரும் சம்பவத்தில் "நீங்கள்சாலையோரம் செல்லுங்கள். காணும் எல்லோரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள்" என்னும் பகுதியை கருத்திற்கொண்டு நாம நமது இயல்பான வாழ்க்கை நல்ல விதமாக நடத்தும்போது நல்ல நட்புக்கள் கிடைக்கும். தெருக்களுக்கு, வீதிகளுக்கு, சாலையோரத்துக்கு செல்வோம், அன்பை இழந்து, நட்பை சுவாசிக்காத, முன்பின் தெரியாத, முகவரியில்லா மனிதர்கள் இருக்கும் இடம் இது. இவர்களோடு இணை

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

ந்து, முழு சமூக, சகோதர, உணர்வோடு மகிழ்ச்சி நிறை விருந்து கொண்டாட்டம் (சேவை)தினம் செய்வோம். இதைத் தான் அன்னை தெரேசா அவர்கள் செய்தார், வெளியே தெருகளுக்கும் சாலையோர்த்திற்கும் சென்று அங்குள்ள நோயாளிகள், பாவிகள், ஏழைகள் மற்றும் அன்பு செய்யப்படாதவர்களுக்கு வாழ்வு கொடுத்தார். ஆசீர்வதிக்கப்பட்டவர் ஆனார்.

எனவே இயேசு இன்று எமக்குத் தரும் அழைப்பை நான் பொருட்படுத்தி தெருக்களுக்கும் சாலையோரத்திற்கும் செல்வோம். இறையரசுக்கு தயாராக நாமும் மற்றவர்களும் வாழ வழி அமைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கால்களுடன் விநோத சகோதரர்கள்!!



பிரேசில் நாட்டில் மூன்று கால்களுடன் ஒட்டிப்பிறந்த இரட்டை சகோதரர்களை அறுவை சிகிச்சை மூலம் பிரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரேசிலின் பஹியா மாநிலத்தை சேர்ந்த எலெய்ன்-ரோச்சா தம்பதியினருக்கு. ஆர்துர் மற்றும் ஹெய்டர் என்ற இரட்டை சகோதரர்கள் ஒட்டி பிறந்துள்ளனர்.


இருவரில் ஆர்தூருக்கு இரு சிறுநீரகங்களும். ஹெய்டருக்கு மூன்று கால்களும் ஒரு சிறுநீரகமும் உள்ளது. மேலும் ஒருவருக்கு மட்டும் பிறப்புறுப்பு உள்ளது.

ஐந்து வயதான இந்த இரட்டை சகோதரர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தால் இருவருமே தனித்து செயற்பட முடியும் என வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இதுகுறித்து இவர்களது தாயார் எலெய்ன் கூறுகையில்.

இந்த அறுவை சிகிச்சையின் மூலம் இருவரின் வாழ்விலும் மகிழ்ச்சியான நாட்கள் தொடங்கிவிடும் என நம்புகிறேன் என்றும் இது எங்கள் ஒட்டுமொத்த குடும்பத்தின் முடிவு எனவும் தெரிவித்துள்ளார்

# உலகில் உயரமான பெண்ணாக கின்னசில் இடம்பிடித்த பெண்!!



உலகிலேயே அதிக உயரத்தை கொண்டவர் என்ற கின்னஸ் சாதனை சான்றிதழ். துருக்கியை சேர்ந்த இளம்பெண் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

துருக்கியின் சப்ரன்பலு காராபக் பகுதியை சேர்ந்த ருமிஷா ஜெல்கி (17) என்ற இளம்பெண் 7.09 அடி உயரத்தை கொண்டுள்ளார். இவரது கைகள் மட்டும் 24.5 செ.மீ நீளமும் கால்கள் 30.5 செமீ நீளமும் கொண்டுள்ளது. மேலும் இவரது ஷூவின் அளவு 12 ஆக இருப்பதால். அமெரிக்காவில் இருந்து தனியாக இவருக்கான ஷூக்கள் வரவழைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் (Weaver Syndrome ) என்ற நோயின் காரணமாக இவர் பாதிக்கப்பட்டுள்ளதால் தான் அதிக உயரம் வளர்ந்ததாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

தற்போது 11ம் வகுப்பு படித்து வரும் ருமிஷா வீட்டிற்கே சென்று கின்னஸ் அதிகாரிகள் உலகின் மிக உயரமான இளம் பெண் என்ற சான்றிதழை வழங்கியதால் அவர் பெரும் மகிழ்ச்சயடைந்ததாக தெரிவித்துள்ளார்.

# மூக்கால் வேகமாக டைப் செய்து கின்னஸ் சாதனை படைத்த நபர்

ஐதராபாத்தில் மிக குறைவான நேரத்தில் நபர் ஒருவர் தனது மூக்கால் டைப்பிங் செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

ஐதராபாத்தைச் சேர்ந்தவர் மொகமத் குர்ஷித் ஹுசைன் (23). இவர் கடந்த 2008ம் ஆண்டு 108 வரிகளை தனது கையால் 47 நொடிகளில் டைப் செய்து கின்னஸ் சாதனை படைத்தார்.

இந்நிலையில் தற்போது மீண்டும் ஒரு கின்னஸ் சாதனையாக தனது கைகள் இரண்டையும் பின்னால் கட்டிக்கொண்டு மூக்கால் மிக குறைந்த நொடிகளில் அதிகமான வரிகளை டைப் செய்து சாதனை படைத்துள்ளார்.






# பச்சைத் தேநீரில் இச்சை கொள்ளுங்கள்


"ஒரு டீ குடுங்க" என கடைக்காரரிடம் கேட்டு அவர் இரண்டரை இஞ்ச் குவளையில் நீட்டும் தேநீரை சுவைத்துக் குடிக்கும் நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும் கிரீன் ரீ என அழைக்கப்படும் பச்சைத் தேநீர் பற்றி ?

நிமிடத்துக்கு பத்து என விளம்பரங்களில் தலை காட்டும் தேநீர்களின் பெயர்களைக் கேட்டுக் கேட்டுக் குழம்பிப் போயிருக்கும் நம்மில் பலருக்கும் தெரியாமலே போய்விட்ட ஒன்று தான் இந்த பச்சைத் தேநீர். இந்தத் தேநீரில் மகத்துவமே இருக்கிறது என ஆராய்ச்சிகள் வியந்து பேசுகின்றன என்பது தான் இந்தத் தேநீரைப் பற்றி நாம் அறிந்து கொள்வது நல்லது என நானும் நினைப் பதற்குக் காரணம். இந்தத் தேநீரை அருந்தி வந்தால் உடல் பருமனாவதிலிருந்து தப்பலாம் எனவும், இந்த கிறீன் ரீ உடலிலுள்ள இன்சுலின் சுரக்கும் தன் மையை வலிமைப்படுத்தும் எனவும் யூகே வின் பர்மிங்காம் பல்கலைக் கழகம் பச் சைத் தேநீர் பற்றி வெளியிட்டிருக்கும் ஆய்வு முடிவிலிருந்தே தொடங்குகிறேன். சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தேநீர் அருந்தத் தொடங்கி விட்ட சீனா வில் தான் இந்த பச்சைத் தேநீரும் முதலில் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதே பெரும்பாலானோரால் ஒத்துக் கொள்ளப் பட்ட பச்சைத் தேநீர் வரலாறு. எனினும் சீனா, ஜப்பான், தாய்லாந்து மற்றும் இந்தியாவில் இந்த பச்சைத் தேநீர் மிகப்பழங் காலம் முதலே பயன் படுத்தப் பட்டு வந்தது என்பதே பரவலான நம்பிக்கை. எதற்குப் பயன்படுத்தினார்கள் என்பது கூடுதல் சுவாரஸ்யமானது. உடலில் காயம் ஏதேனும் ஏற்பட்டால் குருதி வழிதலைக் கட்டுப் படுத்தவும், காயத்தை ஆற்றவும், உடலின் வெப்பத்தை சமநிலைப் படுத்தவும், செரிமானத் தன்மையை அதிகப்படுத்தவும் மற்றும் குருதி சர்க்கரை அளவை மட்டுப்படுத்தவும் இந்த பச்சைத் தேநீர் பயன் படுத் தப் பட்டு வந்ததாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி நேரத்தில் இந்திய வீரர்கள் அசத்தல் பரிதாபகரமாக வீழ்ந்தது மே.இந்தியத் தீவுகள்



வெற்றியை நோக்கி அசத்தலாக முன்னேறிக் கொண்டிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதிக்கட்ட நேரத்தில் தடுமாறி விக்கெட்டுக்களை அடுத்தடுத்து பறிகொடுத்து 48 ஓட்டங்களால் இந்திய அணியிடம் பரிதாபகரமாக வீழ்ந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் 2-வது ஒருநாள் போட்டி நேற்று டில்லி பெரேசா ஹொட்லா அரங்கில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு விராட் ஹோலி - சுரேஸ் ரெய்னா இணை தமக்கிடையில் 4-வது விக்கெட்டுக்காகப் பகிர்ந்த சத (109) இணைப்பாட்டமும், அணித் தலைவர் மகேந்திர சிங் தோனியின் இறுதிநேர அதிரடியும் கைகொடுக்க 50 ஓவர்களின் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் விராட் ஹோலி, சுரேஸ் ரெய்னா ஆகியோர் தலா 62, மகேந்திர சிங் தோனி ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் ஜெரோம் ரெய்லர் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

264 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இன்னிங்சை அழகாக ஆரம்பித்தது. குறிப்பாக அந்த அணியின் டெவோன் ஸ்மித் அற்புதமான இன்னிங்ஸை ஆடினார்.

அவரின் இவ் அதிரடி (97 பந்துகளில் 11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 97 ஓட்டங்கள்) ஆட்டத்தினால் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலகுவாக வெற்றியை ஈட்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவரின் ஆட்டமிழப்பு அணியின் நிலைமையை தலைகீழாக்கியது.

அவரின் ஆட்டமிழப்பின்பின் துடுப்பாட வந்த சாமுவேல்ஸ் 16, ராம்டீன் 03, ரஸல் 04, சமி 01, பிராவோ 10 என முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 46.3 ஓவர்கள் வரையே துடுப்பாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 48 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்திய அணியின் பந்துவீச்சில் சமி 4, மிஸ்ரா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இந்திய அணியின் சமி தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட தொடர் முதல் 2 போட்டிகளின் நிறைவில் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3-வது ஒருநாள் போட்டி வரும் 14-ம் திகதி விசாகபட்டனத்தில் நடைபெறுகிறது.

## பேரா.மனோ சபாரத்தினம் நேற்றுக் காலமானார்



(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மனோ சபாரத்தினம் காலமானார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய மனோ சபாரத்தினம் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் நலன் சார்ந்த திட்டங்களை உருவாக்குவதில் பேராசிரியர் மனோ சபாரத்தினம் பெரும் பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் இறுதிச் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி அம்பலவாணர் வீதியில் உள்ள கந்தன் அருள் இல்லத்தில் நடைபெறும். (எ)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,021 567 1532

## நானே பொது...

யில் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் தாமே பொது வேட்பாளர்கள் என்று கூறி வருகின்றனர். உண்மையில் அவர்கள் பொதுவேட்பாளர்கள் இல்லை.

அவர்கள் அந்தந்தக் கட்சிகளின் தனித்துவமான வேட்பாளர்களே. ஆனால் இலங்கை அரசியலில் எமது கட்சியுடனேயே அதிகமான அரசியல் கட்சிகள் இணைந்துள்ளன.

எனவே நானே பொதுவேட்பாளர் என்ற தகைமை உடையவன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் மூன்றாவது தடவையாகப் போட்டியிடுவேன்.

எதிர்க்கட்சிகள் என்னதான் காரணம் கூறினாலும் அவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை.

ஆனால் எமக்கு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இருக்கிறது. தேர்தலில் நாமே வெலவோம என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார். (எ-11)

## இராணுவத்தை...

கள் மனங்களை மேலும் புண்பட வைக்கக் கூடிய நிகழ்வுகளே இடம்பெறுகின்றன.

உண்மையில் புண்பட்ட ஈழத்தமிழ் மக்களிற்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விதத்தில் ஜனாதிபதி நடந்துகொள்ள வேண்டும் எனில் அவர்களது மனங்களை வெல்லக்கூடிய நடவடிக்கைகளை இனியாவது உடனடியாகச் செய்யவேண்டும்.

இன்று வடக்குக் கிழக்கில் ஆயுதம் ஏந்திய புலிகளோ அன்றி தனி ஈழத்திற்காகப் போராடும் ஆயுதக் குழுக்களோ இல்லை. அப்படி இருப்பதாக யாராவது கூறுவார்களேயானால் அவர்கள் யதார்த்தத்தை உணராதவர்களே ஆவர்.

எனவே இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதற்காக தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதும் இன்னும் நிலைமையை சீரழிக்கும்.

எனவே ஜனாதிபதி அவர்கள் யாழ்ப்பாண விஜயத்தின் போது தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவது உடன் நிறுத்தப்படும் என்றும் இராணுவ முகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடாது எனவும் அறிவிக்க வேண்டும். அறிவிப்பது மட்டுமல்லாது அதனைச் செயற்படுத்தவும் வேண்டும்.

இரண்டாவதாகச் சிறையில் இருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிப்பதாக அறிவித்து அதனையும் உடன் செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் ஜனாதிபதி தமிழ மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உணமையான அக்கறை கொண்டுள்ளார் என்பதை உணர்த்தலாம்.

ஈழத் தமிழ் மக்கள் அற்ப சலுகைகளிற்கு விலை போவார்கள் என யாராவது தவறாக எடை போட்டால் அது மிகவும் பிழையான முடிவாகும்.

மூன்றாவதாக போர் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இன்னும உள்ளூரிலேயே அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்துத் தமிழ் மக்களையும் அவர்களது சொந்த இடத்திலேயே உடன் மீளக் குடியமர்த்தக் கட்டளை இட வேண்டும்.

இவ்வாறு செய்வது அனைத்துலக ரீதியில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசுக்கிருக்கும் அக்கறை பற்றி அதன மீது இருக்கும் சந்தேகத்தைக் குறைக்கும் எனவும் நம்பலாம்.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே இது உங்களிற்குச் சமர்ப்பணம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை மனோகரன்



நவாலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை மனோகரன் (இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர்) நேற்று (11.10.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் அபிராமி தம்பதியரின் மருமகனும், பஞ்சாட்சரராணியின் பாசமிகு கணவரும், இ.மகேஸ்வரி, ஆ.புவனேஸ்வரி, ஐ.மாசிலாமணி (இளைப்பாறிய உதவி முகாமையாளர் இலங்கை வட பிராந்திய போக்குவரத்துச்சபை கோண்டாவில்), த.மங்களேஸ்வரி, ஐ.மணிக்கவாசகர் (இளைப்பாறிய பொறியியற் பகுதி மேற்பார்வையாளர் இலங்கை வட பிராந்திய போக்குவரத்துச்சபை), ஐ.மகிழ்ராஜா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும்,

கோணேஸ்வரன் (பொலிஸ் பரிசோதகர்- நீர்கொழும்பு), கெங்கேஸ்வரன் (கனடா), மனோறஜனி, மனோமாலினி (ஆசிரியர்கள் - யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), ரவீஸ்வரன் (ஆசிரியர் யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோ.ரதிவதனா (ஆசிரியை - வவு/சைவப்பிரகாச வித்தியாலயம்), காலஞ்சென்ற கெ.வாசுகி மற்றும் கெ.டரீனா (கனடா), த.கிருபாகரன் (சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), சி.சிறிகரன் (ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்), ர.மைதிலி (விரிவுரையாளர் மனித வளத்துறை - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும்,

கி.சந்துஜா (மாணவி -உடுவில் மகளிர் கல்லூரி), கி.பிரணவன் (மாணவன் - சு/நாகேஸ்வரி வித்தியாசாலை), சி.தேஷ்னி (மாணவி - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சி.விஷ்ணுயன் (மாணவன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.ஜனுயன், ர.சேயோன், ர.நர்த்தகி (மாணவர்கள் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கோ.மோகனப்பிரதா (வவு/சைவப்பிரகாச வித்தியாலயம்), கோ.தனுசிகா (மாணவி- வவு/கொன்மன்ற்),கெ.பீஷ்மன், கெ.விதுரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]யார் வீதி,
சுன்னாகம்.

தகவல் : குடும்பத்தினர்
ரவீஸ்வரன் (மகன்)
0776160306

(8030)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது பல...

ஏ. அமைப்பின் பிரதானி பிரிகேடியர் பொன்ஸாலே வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பொது பல சேனாவுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலுள்ள பிரச்சினை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்குச் செல்லாமல் தடுக்க வேண்டும்.

பொது பல சேனாவின் மீதுள்ள வெறுப்பு, பகைமை என்பன முஸ்லிம் இளைஞர்களை பயங்கரவாதிகளாக ஆயுதம் தூக்க வைக்கும் நிலைமைக்கு கொண்டு செல்வதைத் இலங்கை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

• இந்த செய்தி குறித்து பொது பல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கருத்து வெளியிடுகையில்,

இந்தியர்கள் எங்களது விடயத்தில் குழப்பமடையாது. அவர்களது வேலை யைப் பார்த்துக் கொள்ளட்டும்.

நாம் எமது வேலையைப் பார்த்துக் கொள்கின்றோம். நாம் இந்த நாட்டில் மோதலையோ, குரோதத்தையோ விதைக்க வில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். மட்டுமல்ல, எந்தவொரு அடிப்படைவாதிகளுக்கும் இந்த நாட்டில் இடமில்லை.

இந்தியாவிலிருந்து வரும் இந்தக் கருத்தும் அந்த அடிப்படைவாதிகளின் குரல் ஆகும்.

எங்களை நிர்வகிப்பதற்கு இந்தியாவிலுள்ளவர்கள் பிரச்சினைப்பட வேண்டிய தேவையில்லை என கூறியுள்ளார். (எ-8)

2016
DV Lottery
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
விண்ணப்ப முடிவுத்திகதி 02.11.2014
திருமுருகன் கொம்நெற்
இல. 271A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
0212227835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
பிரதான வீதி, சங்கானை.
(சி-8729)

Happy Diwali!
விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!
Merry Christmas!
பண்டிகைக்காலத்தை முன்னிட்டு
இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கடிதங்கள், பொதிகள் சேவையில் பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்து நிற்கும்
திருமுருகன் கொம் நெற்
தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.
220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான துரித சேவை.
3 - 5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
உங்கள் இல்லங்களில் வந்து பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கும் வசதி.
கடிதங்கள், உடுபுடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடலுணவுகள், மருந்துப் பொருட்கள், மற்றும் இதர பொருட்களையும் அனுப்பிட முடியும்.
தற்போது 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்.
(1kg க்கான கட்டணம்).
(லண்டன் 625/=, கனடா 950/= பிரான்ஸ் 675/=, ஜேர்மனி 650/=, சுவிஸ் 750/= இத்தாலி 800/=, அவுஸ்ரேலியா 700/=)
(இச்சலுகை எமது நிறுவனத்தில் மட்டுமே உள்ளது.)
திருமுருகன் கொம் நெற் பிறைவேட் லிமிட்டட்
271A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(ஆல் சிலோன் புத்தகக் கடைக்கு முன்பாக)
கிளைகள்:
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
பிரதான வீதி, சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)
தொடர்புகளுக்கு:
0777554528 / 0212227835
நிபந்தனைக்கு உட்பட்டது.
(சி-8728)

# ஜனாதிபதி...

யும் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களையும் புறக்கணித்துவிட்டு ஜனாதிபதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சி நிரலை தயாரித்து விட்டுவருகின்றார்.

தமிழ்மக்களுடையசொந்தநிலங்களில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிற்கின்றார்கள். அந்தமக்களின் காணிகளில் வாழ்ந்த மக்களின் காணிகளை வழங்கவில்லை. மக்களுக்கான வாழ்விடங்களை, பாதுகாப்பினை இன்னும் சீரமைத்துக்கொடுக்கப்படவில்லை.

வடபகுதியிலும் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாகயாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் தங்களுடைய சொந்த நிலங்களில் குடியேறவேண்டிய மூன்று இலட்சத்துக்கு மேற்பட்டமக்கள் அகதிகளாக உள்ளார்கள். அவர்களுடைய நில்ங்களை கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அந்தமக்களின் அடிப்படைபிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

ஜனாதிபதி தனது தேர்தலின் வெற்றிக்காக தனது நிகழ்ச்சிநிரலை அமுல்படுத்தி விட்டு யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் வருகின்றார். பொதுமக்களையும் அரசஉத்தியோகத்தர்களையும் இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவேண்டும் என்று அச்சுறுத்தி பயமுறுத்துகின்றார்கள்.

இவ் ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளில் மக்கள் அடிபணிந்து அச்சப்பட்டு பங்குபற்றத் தேவையில்லை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் இவ் ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளை புறக்கணிப்பதோடு தமிழ் மக்களையும் புறக்கணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

தீபாவளி விசேட சலுகைகள்
5% discount on base fare
15% discount
nation popular travels & tours
0114651199
16 1/2, E.S.பெர்னான்டோ மாவத்தை கொழும்பு-06
Tel-0114378117
Fax:0112055920
0214920920
128, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
Tel:0214920505
Fax:0217538325
0244930830
179, புகையிரதநிலைய வீதி வைரவப்புளியங்குளம் வவுனியா
Tel:0244930830
Fax:0244930831
மதுரை-17700
சென்னை-23400
திருச்சி-22400
கொச்சின்-24900
கொலன்ட்-66500
கட்டார்-27200
பிரான்ஸ்-45500
டுபாய்-27000
கனடா-105700
அவுஸ்ரேலியா-58500
Return
சிங்கப்பூர்-30800
மலேசியா-32000
ஜேர்மனி-72300
மாலைதீவு-33000
சுவிஸ்-98000
இத்தாலி-91000
0773083820
www.nationtravels.com
24 மணித்தியால சேவை வழங்குனர்
(சி-8730)

Vacancy
Ds-max Advertising கம்பனி தனது வடக்கின் 12 வது கிளைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டத்திலிருந்து 14 விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
+ தகைமை:-O/L
+ தங்குமிட வசதி உண்டு
+ வயதெல்லை:-18-30
+ அனுபவம் அவசியமற்றது.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ள:-
0771363797, 0775566226
(சி-8727)

இன்று முதல்
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் அதி விசேட தள்ளுபடி
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்
40 % வரையிலான விலைக்குறைப்புடன்
கண்ணாடி அலுமாரி 14750/- 8950/-
Sofa 40400/- 32320/- (10 வருட உத்தரவாதம்)
மெத்தை 2170/- (2 வருட உத்தரவாதம்)
கண்ணாடி சாப்பாட்டுமேசை 23000/- 18125/-
மரக்கட்டில் 5900/-
பிளாஸ்ரிக் கதிரை 630/-
TV Stand 2990/-
230, நாவலர் றோட் (கிழப்பயடி சந்திக்கும் அத்தியடி சந்திக்கும் இடையில்)
077 358 3879, 077 83 14 201
(சி-8721)

# கிளி...

லைத்தீவிலிருந்து கிளிநொச்சிக்கு மக்களை ஏற்றிச்செல்லும் நோக்கில் சுமார் 50க்கு மேற்பட்ட பஸ்கள் முல்லைத்தீவின் பல பகுதிகளுக்கும் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்திலும் தூர இடங்களிலிருந்து மக்களை அழைத்து வரும் ஏற்பாடுகளும செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (எ-8)

# யாழ்...

ந்து கொண்ட அதிதிகளினை யாழ். புகையிரத நிலையத்தில் பாடசாலை மாணவர்கள் வரவேற்றனர்.

பாடசாலை முடிவடைந்து பி.ப 1.30 மணியளவில் அங்கு கூடிய மாணவர்கள் சுமார் பற்பகல் 4 மணி வரை அங்கு நிற்க வைக்கப்பட்டிருந்தனர். (எ-4)

யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
6-ம் தரத்திற்கான அனுமதி-2015
எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமிழ் மொழி, இருமொழி மூல அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 2014.10.31 ஆகும்.
-அதிபர்
(சி-8722)

SPEED LANKA EXPRESS Courier
வெளிநாடுகளுக்கான
தபால் பொதி விநியோக சேவை
உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(சி-8711)

ரமி இசைத்தட்டு சுவிஸ்
RAMIY RECORDS SWISS MADE
முகவரி: கஸ்தூரியார் வீதி - 127 யாழ்பாணம்
தொடர்புகளுக்கு: 076 6017497 (கவி)
அன்பான ரமி இசைப்பிரியர்களுக்கு ஓர் மகிழ்விக்கும் செய்தி.
இதுவரை நாம் யாழ் மண்ணில் பிரசித்தி பெற்ற திருத்தலங்களில் எமது ரமி இசையை உலா வரச் செய்தோம். அங்கு உங்கள் பேராதரவு பெருகக்கண்டோம். இருந்தும் நீங்கள் எம்மை நாடிவரும் வேளை மலிவுவிற்பனையை தற்காலிகமாக நிறுத்திவிட்டோம். இதனால் இசைப்பிரியர்கள் ஏமாற்றம் அடைந்தீர்கள்.
அவையை போக்கும் முகமாக இப்போது ஒரே கூரையின் கீழ் காலவரையின்றி வரும் 12.10.2014 அன்றிலிருந்து யாழ் கஸ்தூரியார் வீதி 127இல் எமது மலிவு விற்பனை தொடர்கிறது.
தரமான ரமி இசை கேட்டு இலங்கைவாழ் தமிழ்மக்கள் அனைவரும் இன்புறுங்கள்.
அத்துடன் சுவிஸ் கைத்தொலைபேசி, கைக்கடிகாரம், சார்சர், தொலைபேசிக்கவர் அனைத்தும் மிக மிக குறைந்த விலையில் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
- அன்புடன் சி.காந்தன்
(8016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.